

TVM122913
DCL Tiruvannamalai

# கனவின் உபநடிகள்

ஆத்மார்த்தி

# முன்னுரை

எந்தப்பிரச்சினையும் எவ்வளவு எழுதினாலும் தீர்ந்துவிடப் போவதில்லை. ஆனாலும் எழுதுகிறார்கள். எழுதுகிறோம். மனப்பிறழ் வென்பது ஒரு மகா தகுதியாகவும் மாறக்கூடிய ஒரு சமூகத்தில் என் வாழ்க்கையில் எனக்கு நேர்ந்த முதல் மனப்பிறழ்வைத் தீர்த்து வைத்தது இசை என்றால் அடுத்த பிறழ்வை குணமாக்கியவை புத்தகங்கள். மனிதர்களில் நல்ல நண்பர்களைத் தேடாதவர்களுக்கும் கூட இசையும் எழுத்தும் வாழ்வெலாம் நிரந்தரிக்கும் வியப்பான தனித்துணைகள். மனிதர்களை நான் மிகவும் நேசிக்கிறேன். ஆனாலும் எனக்குக் குறைவான நண்பர்களே இருப்பதாக நம்புகிறேன்.

என்மன விகாரமும்கூட இவற்றுக்குக் காரணமாக இருக்கக்கூடும். என்றாலும் என்மீது தீராத அன்பையும் தாண்டித் தன் வார்த்தை களால் வாக்கியங்களால் என்னை ஆற்றுப்படுத்திய மூன்றாவது மனநல மருத்துவன் மனுஷ்யபுத்திரன். அவருக்கு நன்றி.

சொல்ல மாட்டேன். என்னுடனேயே வலம் வரும் நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் என் கணக்கற்ற தோழிகளுக்கும் என் நன்றிகளும் அன்பும். மற்றபடி வேறோன்றுமில்லை. சாலச்சுகம்.

அன்போடு
ஆத்மார்த்தி

27 நவம்பர் 2013
மதுரை
aathmaarthi@gmail.com

## பட்டாம்பூச்சி சட்டைக்காரன்

சாக்லேட்டு கேட்டு
கண்கள் வீங்க அழும்
குழந்தைக்குக்
கிறிஸ்துமஸ் தாத்தாவா

நனவிலி நிலை நோயாளியின்
உயிர்த்துடிப்பு இயந்திரத்தில்
கிடைக்கோடா

சாலையோரத்தில் படுத்துக்கிடக்கிற
இடுப்புகளைத் தட்டியபடியே நடந்து
கோணிபொத்திக் கிடக்கிறவளைத்
தன் லாட்டியால் நிரடி
புணர்வதற்குக் கவர்ந்து செல்லும்
காவலாளியா

சன்னலைத் திறந்து
கைக்கெட்டுகிற
பர்ஸ்,வாட்ச்,செல்போன்
இத்யாதிகளுடன்
சேர்ந்தவாக்கில் வந்துவிட்ட
ஒரேயொரு ஆணுறையைத்
தெருவில் வீசி விசிலடித்தபடி
நடக்கிற கள்வனா

கடைசி இழுப்பு முடிவதற்குள்
வாழ்வாங்கு வாழ ஏங்கும்
பட்டாம்பூச்சி சட்டைக்காரனா

மூன்றுமுறை சுத்தியலால்
தட்டிச் சப்தமாக
அமைதியைக் கட்டளையிடும்
கோமாளியா

எந்த இரவின்
யார் கனவின்
உபநடிகன் நான்?



## காணாமற் போனவர்களின் கடவுள்

காணாமற்போனவர்களின் கடவுளுக்கு
பெருத்த காதுகள்
நீண்டு தொங்கும் நாவு
குழியென்று சிறிய நாசி
சொல்லிக்கொள்ள ஏதுமற்ற உடல்வாகு.
நெடியதும் சிறியதுமான இருகரங்கள்.
கட்டையாலானதும் நிஜமானதுமாய்க் கால்கள்.

விலாவில்
அடையாள அட்டையைச் செருகி
ரகசிய எண்ணை ஒற்றியதும்
காணாமற்போனவர் பற்றிய தகவலை
உள்ளீடு செய்யவியலும்.
வயிற்றிலிருந்து
வருகிற பிரிண்டவ்ட் காகிதத்தில்
உங்களுக்கான கேவியமும் உரிமை எண்
குறிப்பிடப் பட்டிருக்கும்.

காணாமற் போனவர்களைக் குறித்து
எங்கேயும் எப்போதும் நீங்கள்
அழுதுகொள்வதற்கான அனுமதிச்சீட்டு அது
காணாமற்போனவர்கள் திரும்பக் கிடைப்பது
குறித்து உத்தரவாதம் ஏதுமில்லை.
அத்தனை பலஹீனமாயிருந்த போதும்
ஒரு கடவுளிடம் முறையிட்டோம் என்ற
ஆன்ம நிறைவுக்கானது
இந்தக் கடவுளென்னும் ஏற்பாடு.

# ஏடீஎம் மைய வாசலில்
# மழையில் நனையும் பல்ஸர்

அதுவொரு வெளிநாட்டு வங்கியின்
தானியங்கி பணம்வழங்கு மையம்.

(மயிரு என்பதை மயிரு என்றே சொல்லலாம் என்பதால்)
அதுவொரு அமெரிக்க வங்கியின் ஏடீ.எம்.மையம்.

வாசலில் முன்பணமாக
ஒரு ரூபாய் மட்டும் கொடுத்து
0% வட்டியுடன் திருப்பிச் செலுத்தும்
கடன் திட்டத்தில்
மாதாமாதம் 3427ரூ கட்டுகிற
பஜாஜ் பல்ஸர் பைக்ஐ நிறுத்தி விட்டு
இறங்குகிறான் அவன்.

ஏடீஎம் கதவில்
"இயந்திரம் பழுதாகி உள்ளது"
எனக் கையால் எழுதிய அட்டை தொங்குகிறது.
செக்யூரிட்டி
சூடான தேநீர் மற்றும்
ஒரு சிசர்ஸ் ஃபில்டருக்காகவும்
கிளம்பிச்சென்றிருக்கலாம்.

அடித்துப்
பெய்கிற மழை
ஒரு மணி நேரத்திற்காவது பெய்யும்.

கதவில் தொங்குகிற அறிவிப்பைக்



கவனிக்காத அவன்
தன் அட்டையை ஏடீஎம் இயந்திரத்தில் நுழைக்கிறான்.
சிறிது நேரத்துக்குப் பின்
ஏடீஎம் இயந்திரத்தின் தொடுதிரையில்
"மன்னிக்கவும்.இந்த இயந்திரம் பழுதடைந்து உள்ளது"
என மின்னுகிறது.

மழை வலுக்கிறது வெளியே.
அவன் கரங்கள் நடுங்க
கதவைத் திறந்துகொண்டு வெளியேறுகிறான்.

ஒரு அனிமேஷன் நாய்
அவனுக்கடுத்து உள்ளே செல்கிறது.
அதன் கழுத்துப் பட்டையில்
சில வங்கி அட்டைகள் தொங்கிக் கொண்டிருக்கின்றன.
அவற்றை ஒவ்வொன்றாக எடுத்து நுழைக்கிறது.
மீண்டும் மீண்டும் தொடுதிரை மன்னிப்புக் கோருகிறது.
எல்லாவற்றையும் முயற்சித்த பின்
அந்த நாய் ஏடீஎம் அறையின் வாயிற்கதவை
உட்புறமாகத் தாழிடுகிறது.

அவன் வெளியே
ஒரு சிகரட்டைப் புகைத்தபடி
கண்ணகலாது கவனித்துக் கொண்டிருக்கிறான்.
அனிமேஷன் நாய்
ஏடீஎம் இயந்திரத்தை கீழே தள்ள
முயற்சித்துக்கொண்டிருக்கிறது.
................
................
................
சிகரட்டின் கடைசித்துளி வரை இழுத்த
அவன் பார்த்துக்கொண்டே இருக்கிறான்,
இப்போது அந்த நாய்
வெளியேறிக் கடந்து செல்கின்றது.

ஏடீஎம் மையத்தின் கதவு திறந்திருக்கிறது.
அவன் பார்க்கையில்
ஏடீஎம் இயந்திரம்
தனது முழங்கால்களில் முகம் புதைத்து
விசித்து விசித்து
அழுதுகொண்டிருக்கின்றது.

அவன் மெல்ல உள்ளே நுழைகின்றான்.
இன்னமும் அழுதுகொண்டிருக்கிற ஏடீஎம் இயந்திரம்
அவன் நுழைந்ததைக் கண்ணுறவில்லை.
அவன் இப்போது
ஏடீஎம் மையத்தின் கதவை
உட்புறம் தாழிடுகிறான்



## சுகர்

கட்டணக்கழிப்பறையில்
வசூலிப்பவனிடம்
பத்துரூபாய்த் தாளை நீட்டி
மிச்சம் சில்லறை வாங்கி
வேகவேகமாய் உள் நுழைந்து
காலியாய்க் கிட்டிய
பிறையை அணுகும் தருணம்
என்னைத் தள்ளியபடி
முன் ஆக்கிரமிக்கிற ஒருவனின்
முதுகைச்சபித்தபடி
நிற்கிறேன்.
சோகையாய்ச் சிரித்து
"எனக்கு சுகர் சார்.அதான்.சாரி"
என்றபடியே
விலகிப்போகிறான்.

## மைதுனம் செய்யாத இரவு

நான் அவளைப் பார்த்த பொழுது
அவள் ஒருவனுடன் பேசிக்கொண்டிருந்தாள்.
அவள் முகம் சரியாகத் தெரியவில்லை.
அவளைப் பேருந்து நிறுத்தத்தில் இறக்கி விட்டு
தன் டூவீலரில் அவன் சென்றுவிட்டான்.
அதன் பிறகு வெகுநேரம்
அவள் தனக்கான பேருந்துக்காகக் காத்திருக்க நேரிட்டது.
அவளை அதற்கு முன் நான் பார்த்ததே இல்லை.
காத்திருப்பின் அயற்சியைத் தேக்கியவாறு
பேருந்துகளின் கணிதத்தைச் சபித்துக்கொண்டிருந்தாள்.
ஒருவழியாக அவள் காத்திருந்த பேருந்து வந்தது.

அப்படியொன்றும் கூட்டமில்லை.
அவளை ஏற்றிக்கொண்டு கிளம்பிச்செல்கையில்
ஒருமுறை
அவள் என்னைத் திரும்பிப் பார்ப்பாள்
என எண்ணினேன்.
அன்றைக்கிரவு
அவள் முகத்தை எப்படியேனும்
ஞாபகப்படுத்திவிட முயன்று தோற்றேன்.
பிறகு வெகுநேரம் கழித்து
உறக்கத்தில்
என் கழுத்தை ஒருவன் வாளால்
அறுத்துக்கொண்டிருந்தான்.



## உள்ளூரின் கடவுள்

தன்னைக்
கவனிப்பவர்களைக் கவனியாது
ஒரு சன்னலைச்
சாத்துவதும் திறப்பதுமாக
எங்கெங்கோ பயணித்துக்கொண்டே
உங்கள் நம்பகத்தின் கண்ணெதிரே இருக்கிறாள்.
ஒரு சன்னிதான மூலவருக்குக்
கைங்கர்யமாகத்
தினமும் ஏடிஎம் வாசலைக்
கூட்டி மெழுகுகிறாள்.
முலைகள் வெளித்தெரிவது அலட்சியம்.
தன் முகத்தைப் பார்ப்பது குறித்து பரிதவிக்கிறாள்..
மாதவிலக்கு
நின்றதன் பின்
ஒரு சிறுமியாக மாறியிருக்கிறாள்.
ஒரு பட்டாம்பூச்சி
தன்னைப் பட்டாம்பூச்சி
என்று உணருகிற தருணத்தில்
அவள்
தன்னை உள்ளூரின் கடவுள்
என்றறிவிப்பாள்.

# ஒரு மர்ம நாவலின் முடிச்சவிழும் இடம்

ஒரு மர்ம நாவலின்
முடிச்சவிழும் இடம் மிக உன்னதமானது.
ஒரு உண்மையான உண்மை
தோன்றுவது மட்டுமல்லாமல்
சந்தேகத்தின் கருமை படர்ந்த
ஒரு முகத்தின் மீது
அவசரமழை பொழிகிறது.
பலபக்கங்களுக்கு முன் இறந்துகிடந்தவனின்
உறைந்த குருதியை முகர்ந்த
மோப்பநாய் அங்கே மண்டியிட்டு
நகரமறுத்துவிடுகிறது.
நிகழ்ந்துவிட்ட கொலை
ஒரு சிலந்தியென்று படர்ந்திருந்த
அத்தனை பாத்திரங்களும்

தங்களை ஆசுவாசப்படுத்திக் கொள்ள ஏலுகிறது.
கைதுசெய்து அழைத்துச் செல்லப்படுபவனை
அதுகாறும் ஊகிக்க முடியாத
அவனது
முகபாவங்களும் சத்தியவாசகங்களும்
வந்துவந்து செல்கின்றன

'தன்னை எழுதியவன் தான் முதல்குற்றவாளி' என
ஒருவரும் நம்பப்போவதில்லை என்னும்
பேரதிர்ச்சியைத்
தன் முகத்தில் தாங்கியபடி
சிறை சென்றுகொண்டிருக்கிறான்
ஒரு வவ்வாலைப் போல
"முற்றும்" என்ற ஒரு வார்த்தைக்குள்



தானினித் தொங்கிக் கொண்டேயிருக்கப் போவதை
எண்ணி விசும்பி அழுகிறான்.
எதாவதொரு நாவலின்
ஏதோவொரு பாத்திரம்
"அந்த எழுத்தாளனைக் கொன்றுபோடட்டும்"
எனச் சபிக்கவும் செய்கிறான்.

## கேலிச்சித்திரங்கள்

மழையின் கோரநடனம்
பித்துப் போன குடிசைகளுக்குள்
முளைத்துநிற்கின்றன மலட்டுக்குறிகள்.

லாடம் அடிக்கிறவனின்
செருப்பிலூடுருவும் சிறுமுள்
பெருமழைக்கு முந்தைய காற்றீரமாய்..

சாவுச்சேதி கொணர்பவன்
வழித்தடமெங்கும் வாசிக்கிறான்
மரணத்தின் மெல்லிசையை.

பாவனைநூல்கள்
செவிமடுப்பதில்லை
ஆயுதக்கூர்மைகளுக்கு.

எப்பெரிய
மௌனத்தைக் கைவிடுவதற்கும்
ஒரு சொல்போதுமானதாயிருக்கிறது

ஆழமூதாட்டி
வரவேற்றணைக்கிறாள்
விசியெறியப்பட்ட கல் வெம்மையை.

நிழல்
தீர்மானிக்கட்டும்
ஒருபயணத்தையாவது.

ஆராதனைப் போழ்து
மனித தரிசனத்துக்காக
ஏங்கிக்கிடப்பவன் தனிமைக்கடவுள்.

கண்ணீர்த்துளிகளின்
கனத்தை அறிவதில்லை
கேலிச்சித்திரத்தின் கோடுகள்



## பேச்சிலர்

இன்றைக்கு
"குளிர்சாதனத்துக்குள் உறைந்திருக்கிற
பால்பொட்டலத்தை வெளியில் எடுத்துச்
சூடுபண்ணிவைக்குமாறும்"
"முற்றத்துத் துளசிக் கீழ்ப்பொந்து சிறு எலிக்கானது,
அரவத்துக்குரியதன்று" என்றும்
"வாடகை நூல்நிலையத்தில்
மாற்ற வேண்டிய புத்தகங்கள்
தொலைக்காட்சிக்கு மேற்புறம் உள்ளதெனவும்"
"பள்ளிவிட்டு வந்தவுடன் பாப்பாவை
ஹோம் ஒர்க் செய்யவைத்தபின்னரே விளையாட
அனுமதிக்குமாறும்"
"எல்.ஐ.சி. பணம் கட்டிவிட்டு வருகிற வழியில்
காபித்தூள் வாங்கிவருமாறும்"
மாடிவீட்டு வேணி
கணவனிடம் சொல்லிவிட்டு வேலைக்குக் கிளம்புகிறாள்.

நேற்றைக்கு
"ஒலித்துக்கொண்டே இருக்கின்றன
உன் வார்த்தைகளென்றும்"
தனிமையைத் "தனிமை"யென்றும்
"வாதைகளை வாதைகளென்றும்"
தொட்டிக்குள் திரிகிற மீன்களில் ஒருத்தி தானென்றும்
சுவரில் ஒட்டியிருக்கிற
ப்ளாஸ்டிக் வண்ணத்துப்பூச்சி கண்ணயர்வதற்குள்:
பூத்துச் செழிக்கிற செம்பருத்தி உதிர்வதற்குள்
தன் கொலுசொலி வீடு மீளுமென்றும்
"வாழ்க்கை வாழப்பிடிக்கவில்லை" எனவும்
கிடைத்த 5 நிமிடத்தனிமையில்
என்னிடம் சொல்லிவிட்டுப் படியேறிச்சென்றாள், வேணி.

நாளைக்கு
வேணி கேட்டுக்கொண்டபடி நான் அவளை சந்திக்கப்.....

## வருடும் சலங்கை

ஒரு நீலப்படத்துக்கான முன் தயாரிப்புகள் அலாதியானவை.

தட்டப்படாத கதவுகளுடனான ஓரிடம்.
தடையிலா மின்வசதி இன்னபிற அவஸ்யம்.
ஒளிபொங்குகிற படுக்கையறையின்
சுற்றுச்சுவர்களில் முலைப்பால் வெண்மையோ அல்லது
ஐஸ்க்ரீம் நிறமோ பூசப்பட்டிருப்பது உத்தமம்.
சுற்றிலும் கேமிரா சுழலும் வண்ணம்
வாகான மையத்தில்
கட்டில் இடமாற்றப்படுவது முக்கியம்.
கடிகாரம்,சுவர்ப்படம் எனத் தேவையற்ற எந்தப் பொருளும்
இல்லாமல் பார்த்துக்கொள்வது சூட்சுமம்.
அறையுள் இணைந்தாற்போல்
மேற்கத்திய பாணிக் கழிவறை சௌகர்யம்.
எளிதில் அகற்றிவிடக்கூடிய உள்ளாடைகள்
அணிவித்துக்கொண்டு காத்திருக்கிற அவன்
அவஸ்தையினூடே புன்னகைக்கிறான்.
அவளோ பல அர்த்தங்களை
தூயிங்கத்தோடு மென்றுகொண்டிருக்கிறாள்
கேமிராவைக் கையாள்பவன்
அவர்கள் இருவருக்கும்
எந்த வரிசைப்படி என்னென்ன செய்யவேண்டும்
என்ற கதையை விவரிக்கிறான்.
அதனைக் கவனமெடுத்துக் கேட்டுக்கொள்கிறார்கள்
இருவரும்.
என்னென்ன செய்யக் கூடாது என்பதை
மெல்லிய குரலில் கண்டிப்புடன்
அவன் நினைவுபடுத்துகிறாள்.
தன் தலையசைப்பின் மூலமாக
கேமிராக்காரன்.
அங்கே நடக்கப்போவதன்
முழுப்பொறுப்பையும்
தானேற்பதாகக்கூறுகிறான்
முந்தைய தினத்தின் பிற்பகுதியிலிருந்தே
உபவாசம் இருந்துவந்திருக்கிற அவள்
சீக்கிரம் துவங்கச் சொல்லுகிறாள்.
அவளது நாக்கின் மத்தியில்
வருடும் சலங்கையொன்றை
அணியவேண்டியிருப்பதை
ஞாபகப்படுத்துகிறான் கேமிராக்காரன்
மன்னிப்புக் கோரியபடியே
அவள் சலங்கைமணியை அணிந்துகொள்கிறாள்.
தன் உடையின் பொத்தான்கள்
எளிதில் திறந்துகொள்கின்றனவா என
சரியார்க்கின்றனர் இருவரும்.
கேமிராவைக் கையாள்பவன் தன்
கட்டைவிரலை உயர்த்திக்காட்டுகிறான்.
அவர்கள் இருவரும்
அந்த அறைக்குள் நுழைகின்றனர்.
விளக்குகள் உயிர்பெறுகின்றன.

## மகாயுகம்

ஒருபாடலின் இடையிசையாய் கழிந்துகொண்டிருக்கிறது காலம்.

முப்பத்து ஐந்தாவது வரி துவக்கத்தில்என் மடியில் தலைசாய்த்து மரித்துப்போனாள் வயலட் கலரிங் கூந்தல்காரி.

பாடலின் இரண்டாவது வரியிலேயே கள்ளப்பகிர்வுக்குப் பின் திரும்பிவந்தவள் ஏறெடுக்காமல் குளியலறைக்குப் போகிறாள்.

எட்டாவது வரியின் இரட்டிக்கிற வார்த்தைகளின் வழியாக கழுத்தைத் திருகிக் கொலை செய்த பாவத்தின் வீச்சம் வழிகிறது.

இருபத்து இரண்டாம் வரி ஒலித்து முடிக்கையில் உன் மரணம் நிகழ்ந்துகொண்டிருக்கும்.

முதல் பல்லவி முடிந்து மீண்டும் முதல்வரி ஒலிக்கையில் உலகத்தின் ஒட்டுமொத்த வாதைக்குமான மருந்திடல் துவங்குகிறது.

சரணத்தின் மூன்றாம் வரியின் ஆறாவது வார்த்தை எல்லாக் கோரிக்கைகளுக்கும் செவிசாய்ப்பதாயிருக்கிறது.

சூன்யங்களின் பீடிக்கிற கரங்களனைத்தையும்
வெட்டியெறிவதற்கான சூட்சமம் எழுபதாவது வரியினுள்
இருக்கிறது.

ஒப்புக்கொடுக்கிற தேவன்களின் மறைவிடங்களின் மீது ஒளி பாய்ச்சுவதாக எண்பத்தாறாம் வரி திகழ்கிறது.



எலும்புகளைப் பொசுக்கிக் கிடைக்கிற புகையெண்ணையின் மணத்தை தொண்ணூறாவது வரி கமழ்கிறது.

இரண்டாவது சரணத்தின் துவக்க வரியினுள் தேடல்களனைத்தும் முடித்துவைக்கப்படுகின்றன.

அதற்கடுத்த ஆயிரத்துப் பன்னிரண்டாவது வரியில் பூப்படைந்த பின்னரே உயிர்த்தல் நிகழ்கிறது.

சாவதற்குத் தயாரான கிழட்டுபொம்மைகளைக்
கொன்றுவிளையாடும் பிள்ளையினங்களின் பேரொலி
எட்டாயிரமாவது வரியில் வருகிறது.

பாக்கெட்டுகளில் எல்லாவற்றையுமே காய்க்கிற ஒற்றை மரத்தில் அன்பின் பொட்டலங்களைச்சீந்துவாரில்லை என்ற குறிப்பு பதின்மூன்றாம்வரியில் தொனிக்கிறது.

மூன்றாவது சரணத்தின் ஒன்பதாவது வரியில் கடுக்கைக் கண்ணியனைத் தன் சடைபிரியொன்றில் தூக்கிலிட்டு நடனமாடுகிற குண்டலி எள்ளுகிறாள்.

நாப்பத்துமூன்றாயிரத்துப் பதினாறாவது வரியில் மீன்கள் எல்லாம் செத்து மிதக்கின்றன நீர்தளத்தில்.

பத்தொன்பதாவது வரியின் கடைசிக்கு முந்தைய சொல்லில் அணைந்துகொண்டிருக்கிறது வானம்.

பூச்சியம் தவிர வேறொன்றுமில்லை.

## கனவின் அழைப்பொலி

குப்பை பொறுக்குகிற ஒருவனைப்
பின் தொடர்ந்து செல்லலாம்.
அவன்
எந்தவிதமான ஒழுங்கையும் கடைபிடிக்காமல்
வீதிகளை அணுகுகின்றான்.
ஒரு முட்டுச்சந்தின் இறுதி வரை
இருபுறங்களிலும் நிறப்பேதும் இருக்கும் எனத் தேடுகிறான்.
பார்வையை இடறும் எல்லாப் பொருட்களையும்
முதலில் எடுத்துத்
தன் தோள்சரியும் பையில் அடக்கிக் கொள்கிறான்.
எடை குறைவான பொருட்களைச் சேகரிப்பது
சுலபமாயிருக்கிறது.
நல்ல பிளாஸ்டிக்கும் சுமாரான பிளாஸ்டிக்கும்
கணிசமாய்த் தேறுகிற தினங்களில்
அவன் வான் பார்த்து நன்றி பகிர்வான்.

தன்னிடத்துக்குச் செல்லும் வரை
கிட்டுகிற எல்லாவற்றையும் சேகரம் செய்கிறான்.
கொட்டிக் கவிழ்த்து
விலைபோகிறவைகளைத் தக்கவைத்துக்கொண்டு
விலையற்றவைகளை மீண்டும்
வேறோர் இடத்தில் எறிகிறான்.
பேப்பரில் சுற்றியபடி வந்துவிட்ட ஆணுறையையும்
ரத்தம் தோய்ந்த பஞ்சுத் துணுக்குகளையும்
உடைந்து போன கடவுள் சிலையையும்
கிழித்தெறியப்பட்ட கடிதசத்தியத் துகள்களையும்
பாதி எரிந்த கரன்ஸிக் கட்டு ஒன்றையும்



சபித்தல் இல்லாமல் அணுக முடிந்தது அவனால்.
புலர்ந்துகொண்டிருந்த காலை வேளையில்
ஒரு கொழுத்த குப்பைத் தொட்டியைக்
குச்சி கொண்டு கிளறுகையில்
உள்ளே இருந்து கேட்ட குழந்தையின் முனகல்
தன் கனவின் அழைப்பொலியாக
நிரந்தரித்துப் போனதை நடுங்கியபடியே கேட்கிறான்.
அதனை மாற்றி விடுவதற்கான
வாடிக்கையாளர் சேவை மையத்தின்
தொடர்பு எண் கிட்டுகிற நாளை நோக்கித்
தன் பிரார்த்தனைகளை உதிர்த்தபடி
வாழச்சம்மதிக்கிறான்.
மற்றபடி சாலச்சுகம்

## டெமோ:

தணிக்கையற்ற சித்திரங்களின் கூர்மையில்
உறுப்புகள் கிழிந்து தொங்குகின்றன
நினைத்த மாத்திரத்தில் புணரும் சூட்சுமங்கள்
பெருக்கெடுக்கும் ஓடை.
பாலின மாற்றம் செய்விக்கப்பட்ட நட்சத்திரங்கள்
மூத்திரப்பிறைகளில் சிதறிக் கிடக்கின்றன.
ஞானபீடத்தில் வரிசையாய்க் குத்திட்டு
அமர்ந்திருக்கும் குருமார்கள்.
காமத்தை க்ரோதத்தை பயிற்றுவிக்க
கஞ்சா புகைவட்டத்தினூடே
வழங்கப்பெறுகிறது தீட்சை.
சுபயோக சுபதினங்களுக்கும்
தீட்டுவிலக்குகளுக்கும்
ஒரே மாதிரி ஒளிர்கிறது
மஞ்சள் பல்பு.

காமம் தொலைத்த பல்லிகள்
விருப்பமின்றிப் புணர்கின்றன
ஒன்றை மற்றொன்று.



## தனித்திருக்கும் உடல்களின் இரவு

இரவு இருண்டு கிடக்கிறது.

அதன் உடல் ஒரு நோயுற்ற சர்ப்பத்தைப் போல நெளிகின்றது.
காற்றறுந்த தேசலாய் பொழுது உறைகிறது
கானல் ஆயம் போலத் தனித்துக் கிடக்கின்றது விடியல்.
சாட்சியமற்ற இருள் சந்தில்
ஓலமிடுவதற்குச் சந்தர்ப்பம் வாய்க்காமல்
சட்டென்று அறுக்கப்பட்டவனின் குரல்வளையிலிருந்து
பீறிடும் குருதியெனப்
பெருக்கெடுக்கிறது வாதை
சரிந்து கிடப்பவன்
எப்போதோ எடுத்துக்கொண்ட
சிரித்த முகத்தின் புகைப்படத்திற்கு
ஆறு பத்திகளுக்கு மேலே
திசையறியாது
இன்னொரு தரம்
பயணிக்கவிருக்கிற
கோட்டுச்சித்திரக்காரனின்
பெயர் சிந்துபாத்.

## சரோஜாதேவி

வெம்மைப் பொழுது உள்ளூடுருவுகிறது பேய்.
நாசியடைக்கிறது குளிர்காற்று
காதுமடல் ரோமக்கால்கள் குத்திநிற்கின்றன
குருதி மெழுகு மெல்ல உருகுகிறது.
ஒற்றைச்சுடரோடு வந்துவிடுமாறு
நடுப்பக்க நாயகி ஒருத்தியிடம் கெஞ்சுகிறேன்.
அவள் உட்புறம் குதித்துத்
தற்கொலை செய்துகொள்கிறாள்.
பருத்த மார்புகளுடனும்
கலைந்ததொடைகளுடனும்
கழிந்த நாபியுடனும் வரக்கோரிய
என் இறைஞ்சுதல்கள் காதில் விழாத
நீலப்படத்து நாயகி
வேறொரு வாஞ்சை பற்றிக்
கிசுகிசுத்துக்கொண்டிருக்கிறாள்
மைதுனமுயல்வுகள் இருள்விட்டங்களில்
வௌவால்களுக்கு இரையாகிவிட்டிருக்கின்றன.
கவிழ்த்துவைத்த புத்தகத்தினுள் தஞ்சம்புகுகிறேன்.
ததும்பும் கண்களோடு..



## வராமற்போன தேவன்

உன்னதமான சங்கீதத்தைக் கேட்கத் தலைப்படுகிறாயா..?

கூட்டம் கூட்டமாக கொல்லப்பட்டபோது
கேள்வி ஒன்றை எழுப்பியதற்காக சுட்டுத் தள்ளப்பட்டபோது
நாடுகளைப் பிடிக்கும் ஆவலாதியில் கிளம்பியவனின் எதிர்த்
திசையில் வந்தபொழுது
ஒரு மொழியை அறியாமல் இருந்தபொழுது
ஒரு கருவியைப் பற்றி தெரிந்துகொள்ளாமல் இருந்தபொழுது
ஒரு புதிய தெய்வத்தை ஏற்றுக்கொள்ளாமல் இருந்தபொழுது
என் தங்கம் என் உரிமை என்றெல்லாம் குரல் எழுப்பிய பொழுது
கூட்டம் கூட்டமாகக் கொல்லப்பட்ட பொழுது
வாசிக்கப்பட்டதென்னவோ இதே இசைதான்.
இந்த இசையின் வேறு இசையாக இருந்திருக்கக் கூடும்.
கேட்கச் சித்தமாயிருக்கிறாயா

வராமற்போன தேவன் இன்னமும் வந்துகொண்டிருக்கிறான்
என்ற நம்பிக்கையில் கரமொற்றிக் கண்கலங்கி
"எம் தேவனே....எம்மை ஏன் கைவிட்டீர் என்று
கேவலுடனே முடிந்துபோனவர்களின்
கடைசிச் சப்தம்
இந்த இசையின்
இடைக்குரலாக உடனொலியாக
குருதிவழியும் அதன் தொனியாக
எல்லாமும் இருந்துகொண்டிருக்கக் கூடும்.

இந்த இசை உன்னதமானது.
ஒரு நகரம் பற்றி எரியும் போது
பிணங்களின் மெழுகுகளைத்

தன் மீது பூசிய ஒருவனின்
வயலின் எழுப்பக் கூடிய பேரோசை.

ஒரு கையெழுத்தில்
தடுத்து நிறுத்தியிருக்கக் கூடிய
உயிர்களின் எண்ணிக்கையைப் புறந்தள்ளினபடியே
போரின் புனிதத்தைப் பறைசாற்றுகிற உன்னதமான இசை அது.

கேள்
இந்த இசையை.
அதன் பிற்பாடு
யாழ் எடுத்து
இன்பம் சேர்க்கத்
தெரியாதா
உனக்கு



# ஆம் ஹிட்லர் எல்லாம் நன்றாகப் போய்க்கொண்டிருக்கிறது

ஹிட்லரிடம் ஒரு வயலின் இருந்தது.
அது பற்றிய சிறுகுறிப்புக் கூட எங்கேயும் கேள்விப்படாதிருக்கக் கூடும்.
ஹிட்லரிடம் ஒரு வயலின் இல்லவே இல்லை என்று
வாதிடப் போவதில்லை நீங்கள்.
ஹிட்லரிடம் இருந்த வயலின் மிக அழகானது.

ஹிட்லரின் வயலின்
மிகமிகப் பத்திரமானதொரு இடத்தில் வைக்கப் பட்டிருந்தது.
அவ்வளவு சீக்கிரத்தில் அதனைப் பார்த்துவிடவியலாது.
ஹிட்லரின் அரண்மனையில்
படுக்கையறைக்குப் போகும் வழியில்
அது வைக்கப்பட்டிருந்தது.

கண்ணாடி அலமாரியில் வைத்துப் பூட்டப் பட்டிருந்தது.

ஹிட்லரின் வயலின் மிக விலையுயர்ந்தது.
அதன் கைப்பிடி தங்கத்தாலானது.
அது பார்ப்பதற்கு மிக வசீகரமானதாயிருந்தது.
அதிலிருந்து எழும் இசை வெகு நேர்த்தியானது.
ஒவ்வொரு ஒருத்தியைப் புணர்ந்து முடித்த பின்னரும்
ஒவ்வொரு ஒருவனைக் கொலை செய்து முடித்த பின்னரும்
ஒவ்வொரு சிலருக்கு தண்டனைகளை வழங்கியபிறகும்
ஒவ்வொரு ஒருசில முடிவுகளை எடுத்த பிற்பாடும்
ஹிட்லரின் வயலின் வாசிக்கப்பட்டிருந்தது.

ஹிட்லரின் வயலின்

காதலை வாசிக்கையில் அதிலிருந்து
குருதிபொசுங்கிய மணம் கமழ்ந்திருந்தது.
அதே வயலின்
காமத்தைப் போற்றுகையில்
எலும்புகளின் புகைச்சல் அதிலிருந்து எழலாயிற்று.
அந்த வயலினில்
அன்பு கசிகையிலெல்லாமும்
சூனியத்தின் நாற்றம் பொசுங்கிவழிந்தது.
கெட்டித்த குருதித் துணுக்குகளைத்
தின்னவந்த எறும்பினங்கள்
கூட்டம் கூட்டமாய் மரித்துக்கிடந்தன.
எறும்பினங்களின் மரணம்
ஹிட்லருக்கு ஆறாத்துயரத்தை ஏற்படுத்தியது.

ஹிட்லரின் பெருங்கருணை
உறக்கமற்ற இரவுகளின் அனாதித்துயரத்தை பரிசளிக்கத்
தொடங்கிற்று.
ஒரு நாள் ஹிட்லரின் வயலின்
தன் தலையில்
துப்பாக்கி கொண்டு துளைத்துத் தற்கொலை செய்துகொண்டது.
அதனை காணச்சகிக்காத ஹிட்லர்
தன் வயலினின் ப்ரேதத்தின் காலடியில் அமர்ந்து
கண்ணீர் உகுத்தார்.

ஹிட்லர் அதன் பின்னர் எங்கே சென்றார் என்று
யாருக்குமே தெரியாது.
ஹிட்லரின் வயலினை நீங்கள்
ஹிட்லர் என்று தவறுதலாய்ப் புரிந்து கொண்டிராவிட்டால்
ஹிட்லர் காணாமற் போயிருக்க மாட்டார்.



# நிலங்களின் நான்கு மால்

தலைகீழாய்த் தொங்குகிற
உடல்களின் தோட்டத்தில் எழுகின்றேன்.
அறுத்தெறியப்பட்ட பின்னும்
கரங்கள் விடுதலை அடைந்துவிடக் கூடாதென்று
வரிசை கட்டி நிற்கின்றன முலைகள்.
ஒரு உடலைச் சிறை செய்வதென்பது சுலபம்.
எங்கெங்கே கட்டுவதென்பதைப் பற்றின
ஆதிக்குறிப்புகளை
விடுவிக்கிற சூட்சுமத்தில் நுரைபொங்குகிறது

பின் தொடர்வது
பழகிய மிருகமாயிருப்பது கொடுப்பினை.
கிழித்தெறிகிற பற்கள்
எத்தனை என்னவாயிருக்கும் எனத் துவங்கி
மரணம் முத்தமிடுவதற்கு முன்னால்
தீர்ப்பின் ஷரத்துக்களை அறிவதற்கு ஏங்குகின்றது மனம்.

இன்னமும் இயங்கிக்கொண்டே இருக்கிறது
நெற்றிப்பொட்டில் சூடுவாங்கி மரித்தவனின் ஏகே47
தம் மரணம்
செய்தியாய் வாசிக்கப்படுகிற
நிலங்களின் நான்கு மால்
எவையெவை என்ற
கேள்வியில் உறைந்தவனின்
கண்பிதுங்கல்கள் தூதுமிக்கவை.

புத்தனின் கடைவாய்க் குருதி
சம்மணமிட்ட கால்களுக்கிடையில்
வழிந்துகொண்டிருக்கிறது.
குழந்தைகள் பிசாசுகளான பின்னும்
பாலுக்கழுவதைத் தொடர்கின்றன.
இறந்தவர்களனைவரும்
தொடர்பு எல்லைக்கு வெளியே இருப்பதாகக் கொள்ளலாம்.
நான்
உயிரோடு இருக்கிறதை
நம்பப் போவதில்லை நீங்கள்.

# பிறழ்முத்தங்கள்

ம்யூரல் சித்திர
ஆட்டக்காரி
தேவசைகையில்
மொழிந்து செல்கிறாள்
தன் சாட்சியத்தில்
கண்ணுற்ற
பிறழ்முத்தங்களை



# உபயாத்ரீகன்

கூடுமீள்கிற
சங்ககாலப் பறவைகளின்
வழிச்சத்திர மரநிழலில்
கண்ணயர்கிற
உபயாத்ரீகன் நான்
யாராக வருகிறாய்
நீ.

## ரகசியகணங்கள்

ரகசியகணங்களின்
நகநுனி JPEG சித்திரங்களில்
வழிகிறது காதல்
ஒரு
"டெலீட் ஆல்"
கட்டளைக்குப் பயந்து
கேச்சீ சட்டகங்களை
சதுக்கபூதத்துக்குத்
தின்னக்கொடுக்கிறது
32ஜிபி மாயத்தகடு



## களவாடியவன்

எல்லாத் தகவல்களை
அழித்த பின்னர்
முன் திரையில்
கொள்ளை
அழகுகாட்டிச்
சிரிக்கிற
குழந்தையின் புகைப்படத்தை
என்னசெய்வதென்று
விழிக்கிறான்
செல்பேசியைக் களவாடியவன்

## ஸிரோவை இழத்தல்

வார்த்தைகளின்
மறைவிடத்தைத் திறந்துபார்க்கிற
கள்ளச்சாவியாய் அனுகல்களைப் பயன்படுத்துகிறாய்.
நீண்டலுக்கும் வருடலுக்கும்
வித்யாசம் இல்லை என நிறுவுகிறாய்.

அடிப்பிரதட்சணத்தை
முடித்துவிட்டுத்திரும்புகிற வழியில்
பரபரத்த சாலையில்
இறைஞ்சுகுரலில் சிக்குத்தலையுடன்
வெளிறியகண்களால் விண்ணப்பித்தபடி
"வாய்ப்பாடு ஸ்டிக்கர் டோராபுத்தகம்"
ஏதேனும் வாங்கிக்கொள்ளக்கேட்டபின்
பசிக்கிறதாகவும் சொல்லும் பிள்ளைகளிடத்தில்
கவனியாது
பச்சைவிளக்குக்கு காத்திருக்க உன்னால் இயலுகிறது.

மீன்களுக்கு உணவிடுவதிலினின்றும்
பூந்தொட்டிகளுக்கு நீரூற்றுவதிலிருந்தும்
விடுவித்துக்கொள்ள காரணங்களை முன்வைக்கிறாய்.
காட்டுப்பூக்களை சட்டகத்துக்குள் பாடம்செய்து
விற்கிற சாலைவியாபாரியிடத்தில்
பேரமொன்றின் பின்
மறுதலித்துத் திரும்புகையில்
கடைவாயின் குருதியை அறியாய்.
மருளும் விழிகளோடு
குறுக்குச்சாலைகளில் தென்படும்
அதிதிகளுக்குப் போலிவிதிகளைக்
காட்டிக் கெக்கலிக்கிறாய்.



அந்தக் கணத்தில்
உன் மேனி நொறுங்கத் துவங்குகிறது

வலியை முன்வைத்து
வதங்கலில் முனகியபடி
என் பேரன்பைக் கோருகையில்
குழந்தையாய்த் தான்
மடிபுகுகிறாய்.

க்ரூரங்களைக் கைவிட்டு
உன் தலைகோதத் தொடங்குகையில்
பெறுகிறவையெல்லாமும்
இழந்துகொண்டிருக்கிறாயெனத்
தெரிவதில்லை

## இரண்டாவது நாய்க்குட்டி

நாய்க்குட்டி ஒன்று வாங்கியிருக்கிறேன்.
இதற்கு முன்னாலிருந்த
நாயின் பேரையே
இதற்கும் சூட்டியிருக்கிறேன்,
அது
கூப்பிட்ட குரலுக்கு வருகிறது.
முனகியபடியே மடியில் ஏறி அமர்கிறது.
உறக்கத்தில் அதன் மீது என் கரம் படுகையில்
செல்லமாய்க் கடிக்க முனைகிறது.
மெலிசான பொருட்களைத் தன் வாயால் கவ்விக்கொண்டு வந்து தருகிறது.
அன்னியர்களைப் பார்த்து நிறுத்தாமல் குரைக்கிறது.
பழக்கமானவர்களின் பாதங்களை மாறிமாறி முகர்ந்து பார்க்கத் தெரிந்துவைத்திருக்கிறது.
நடைப்பயிற்சி நேரத்தில் உடன்வந்து இடமும்வலமுமாய் மாறிமாறி அதிசயித்துக்கொண்டே தொடர்கிறது;

தன் பேட்டரியை அகற்றாதவரை
மரித்துப்போக மாட்டேன்
என்னும் அதன்
எந்திர சத்தியம்
எனக்குப் போதுமானதாயிருக்கிறது.



## அதிகாரம்

ரொம்பத்தான் அதிகாரம்
செய்கிறது
இந்த அன்பை வைத்துக்கொண்டு
என்னதான் செய்வது?

## காக்டெயில்

### 1.நடைசார்த்துதல்

மதுக்கூடம் பூட்டப்பட்டுவிட்டது.
வழங்கப்பட்ட நேரம் முடிந்ததும்
கருணையின்றி உள்ளிருந்தவர்கள் வெளியேற்றப்பட்டனர்.
தத்தமது கடிகாரங்களில்
இன்னும் சில நிமிடங்கள்
இருக்கிறதாய் வாதிட்டவர்கள்
ஒரு புன்னகையோடு கூடிய
இரும்புப் பிடிகளோடு
அனுப்பிவைக்கப்பட்டனர்.

ப்ரக்ஞையற்றுத்
தன்னிலிருந்து வெளியேறி
உலவிய சிலரை,
ப்ரேதம்போல் தூக்கிச்சென்று
சாலையில் இறக்கிவைப்பதும் நடந்தது

வெளியே வீசப்பட்டவனொருவன்
அரற்றியபடியே
அதிகாரபீடங்களைச் சாடிக்கொண்டிருக்கிறான்.
அவனுக்கு எதிரே இருக்கிறவர்களை
அவனே தீர்மானித்துக்கொள்கிறான்.
தணிக்கையற்ற ஒரு மொழியினை
அவன் உபதேசித்துக்கொண்டிருக்கிறான்.
அம்மொழி அத்தனை அன்பானதாயிருக்கிறது.

தன் தேடலுக்குள்
தான் புகுந்துகொள்ள விழைகிற
சித்தாந்தத்தைப் பகிர்கிறோமென்று
அவன் ஒருபோதும் அறிந்திருக்கவில்லை.



### 2.உச்சிகால பூஜை

மதுக்கூடத்தைப் பராமரிக்கிற
ஒரு வயோதிகரும் இன்னொருவனும் நுழைகின்றனர்
வயோதிகர் எச்சில் பண்டங்களை அகற்றிக்கொண்டிருக்கிறார்.
வாலிபன் பீர்க்குடுவைகளை சாக்கிலிடுகிறான்.
வயோதிகர் தண்ணீர்ப்பாக்கெட்டுகளை நீக்கத்தொடங்குகிறார்
வாலிபன் ப்ளாஸ்டிக் தம்ளர்களை தனியே அகற்றுகிறான்.

பரந்த மதுக்கூடத்தின் ஓரத்தில்
டேபிள்களுக்குமேலாய்க்
கவிழ்ந்துறங்குகின்றன ப்ளாஸ்டிக் சேர்கள்.
கூடமெங்கும் அலம்பிவிடுகின்றனர்
சுழன்றுகொண்டிருக்கிறது
மின்விசிறி கட்டக் கட்டக் கட்டக் கட்டக்
வேலை அலுப்பு முகத்தில் வழிய
பீடியைப் பற்றவைக்கிறான் கிழவன்.
அவன் பீடியைத் தனதால்
முத்தமிட்டுக்கொண்டு அகலுகிறான் வாலிபன்.

மதுக்கூடத்தின் உள்ளே
எல்லா விளக்குகளும்
அணைக்கப்படுகின்றன.
பொங்கும் மார்புகளோடு புன்னகைக்கிற
சுவர்விளம்பர ஓவியனுக்கு
தினந்தினம் வாய்க்கும் தனிமை
இன்னும் சிறிது நேரத்தில் துவங்கவிருக்கிறது.

காலி மதுபோத்தல்களிலிருந்து
எஞ்சிய துளிகளை
கிழவனின் கையிலிருக்கிற பாத்திரத்தில்
சேகரம் செய்கிறான் வாலிபன்.

கனிசமாய்த் திரவம்தளும்புகையில்
குடிக்கத் துவங்குகின்றனர் அவ்விருவரும்.
தங்களின் அன்றைய
காக்டெயிலை

## மூன்று கண் பூதகி

பகலில் சொன்ன
கதையின்
மூன்று கண் பூதகி
கனவில் நுழைந்துவிடாதபடிக்கு
இரவைக் காவல்காக்கிறான்
கதைசொல்லி



## சந்தர்ப்பம்

தப்பிக்கச் சந்தர்ப்பம்
கிட்டாதாவென
எச்சில் விழுங்கக் காத்திருக்கிறது
வனாந்திரப் பெருமரத்தில்
அறைபட்டுக்கிடக்கும்
வயோதிகப் பேயொன்று.

122913

## ஒற்றை இலை

தன்னைப் பெருமரமென்று
மகிழும் நதி மேனியில் அமர்ந்து
தானொரு அகன்ற நதி
என்றறிவிக்கிறது
ஒற்றை இலை



## பாதரச மல்லி

மன்னன் கூரைக்குத் தப்பிக்
கோணற்சுவற்றில் பூத்த
பாதரச மல்லியைக்
கையால் பற்றிப்
பறித்த கணத்தில்
நான் பூவாகியிருந்தேன்.

மாவட்ட மைய நூலகம்
122913
திருவண்ணாமலை

# ராணி என்றால் ராணி

ராணியொருவள்
ராணி என்றே அறியப்பட்டவள்.
அவளது இயற்பெயர் எவருக்கும் நினைவிலில்லை.
யாருமறியாத அவள் முன் கதை
தன் வீட்டு வாசலில் கோலமிடப்
புள்ளி வைத்ததற்கும் கோலமிட்டதற்கும்
இடையிலான கணங்களில்
நகர்வலம் வந்த
மத்திம வயது ராஜாவின் கண் பட்டு
ராணியாக மாற்றப்பட்டாள்.

ராணியான பின் அவளுக்கு மூன்று பணிகள் இருந்தன.
ஒன்று ராஜசபையை அலங்கரிப்பது.
இரண்டு ராஜாவின் குறிப்பறிந்து புன்னகைப்பது.
மூன்றாவது ராஜாவின்
இருக்கைகளிலும் படுக்கைகளிலும் இடதுபுறங்களை நிரப்புவது.

துர்க்கனவொன்று,
கண்டதிலிருந்து ஏழாம் நாள்
ராஜாவின் மரணமாக பலித்தது.
ராஜாவற்ற ராணியானாள்
ராணி.
ஆட்சிப்பொறுப்பேற்ற ராணி
அடிமைப் பெண்கள் அனைவரையும்
விடுதலை செய்யும்
ஆணை ஒன்றைப் பிறப்பித்தாள்.
ராஜாவின்
அந்தப்புரம் வெடிகொண்டு தகர்க்கப்பட்டது.
அங்கே அழகான
மழலையர் பள்ளி ஏற்படுத்தப் பட்டது.



ராணியைப் போல்
எந்த ராஜாவும் இருந்ததில்லை
எனப் புகழாரங்கள் சூட்டப்பட்டன.
"ராணி என்றால் ராணி" என்று கொண்டாடினர்.

ராணிக்கு வயது எழுபதானது..
அவளொரு தினம் நகர்வலம் சென்றாள்.
ஒரு இளைஞன்
தன்வீட்டு வாசலில்
கோலமிடுவதற்கான புள்ளிகளை
வைத்துக்கொண்டிருக்கையில்
ராணியின்
கண்களில் பட்டான்.

அந்தப்புரமொன்றை
ஏற்படுத்தி அவனை
ஆண்ராணியாக
மாற்றினாள்
ராணி.

## ஒருவேளை

ஒருவேளை
நான்தான் கடவுளோ
என்னிது
இப்படித் தனிக்க ஏலுகிறது

## நீ

இரேன்
நீயாவது
நீயாகவாவது

## கைரேகை

ஏதுமிருப்பின்
நிரூபிக்க
ஏதுவாயிருக்கும்
என்னிடமிருப்பவை
வெறும்
இதயத்துடிப்புகள் தான்



## ஐந்து கவிதைகள்

**என்னை**

எப்படிக் கொல்வது
என்று திட்டம்
தீட்டிக்கொண்டிருக்கிறோம்.
யாரேனும்
கதவை
உடைத்துக்கொண்டு வந்து
தடுத்து நிறுத்திவிடக்கூடும்
என்றொரு பயமும்
இல்லாமலில்லை.

**ஆம்!**

நான் தான்
அதனைச் செய்தேன்
என்றெழுதி
கையொப்பமிட்டுக் கொடுத்தபின்
என்னை அடிப்பதை
நிறுத்திவிட்டார்கள்.

**கனவு**

திரிகூடராசப்பக் கவிராயர்
நேற்றென்
கனவில் வந்தார்.

முன்பொருதினம்
ஒரு அன்னியனாய்
அவர் கனவில்
நான் வந்தமைக்குப்
பழியெடுத்துவிட்டதாகச்
சொல்லிச் சென்றார்.

**நிஜம்**

நீ
சொல்வது
தான்
நிஜம்.
விடேன்.

**இன்ஃப்ளுயன்ஸ்**

எனக்குத் தெரிந்த
போலீஸ்கார் ஒருவர்
அடுத்ததரம்
என்கவுண்டர் நடக்கும்போது
என்னை அழைத்துச் சென்று
காட்டுவதாகச் சொல்லியிருக்கிறார்



## ஊரோடி

அவனொரு ஊரோடி..

அவன் சேகரித்தபடி செல்லும்
எப்பொருள் குறித்தும்
எந்த மதிப்பீடும் இல்லை
உம்மிடம்.
உம் கைப்பொருள்
எது குறித்தும்
அவனுக்கும் இல்லாதது போல்.
நீங்கள் போய்க்கொண்டிருக்கும்
இடம் குறித்து அவனுக்கு
எந்த அக்கறையும் இல்லை.
அவனது பயணக்குறிப்புகள்
நீங்கள் அறியாததைப் போல்

நீங்கள் பிரார்த்திக்கிற கடவுளர்கள்
பேசாதிருக்கிற
பிரகார இருள்மூலைகளில் முட்டித் திரும்புகிற
வவ்வாலினது போல வேறொரு பயணம் அவனது.
உங்களின் பல் வெண்மை குறித்து மகிழ்ந்துகொள்ளும்
அதே நேரத்தில்
அவனது காவிபடிந்த பற்கள் குறித்து அருசை கொள்ளவும்
ஏலுகிறது உங்களால்.
தன் பாவனை வில்கொண்டு
எல்லா நிறங்களையும் அவன் வீழ்த்தியிருக்கிறான் என்று
அறியமாட்டீர்கள்.

காலம்
ஒருபுறம் நடப்பதை மறுபுறம் காட்டிக்கொடுக்கும்
கண்ணாடியாய்
அவனோடு
சேர்ந்து
கெக்கலித்தபடி
பயணிப்பதைப்
பைத்தியம் என்றே சொல்லிக்கொள்ளுங்கள்,

## விசித்திரளின் அறை

தானொன்றும்
விளையாட்டுப் பொருளல்ல
என்று புரியாமொழியில் பிதற்றியபடியே
தன் கழுத்தைத் தானே அறுப்பதாய்ப்
பாவனை செய்யும் டெடிபேரின்
ப்ரவுன் குருதித் துளிகளை
நக்கி ருசித்துக் கொண்டிருக்கும்
ஒரு கெட்டவார்த்தையைத்
தன் பெயரெனக் கொண்ட
வளர்ப்புப் பூனை.

அலைகிற தொட்டி மீன்களில்
ஃபைட்டர் ஒன்று
புரட்சி பற்றி செதிள் புடைக்கப்
பிரசங்கித்துக் கொண்டிருக்கும்.
விடுதலையின் தேவை பற்றி முழங்குகையில்
மற்ற மீன்களெல்லாம் நினைவுதப்பி மிதக்கும்.

.பறிக்க முயன்ற ஆதாமின்
வலதுகையில் வெடுக்கெனப்
பல்பதிக்கும் ஆப்பிள் சர்ப்பம்.
மயங்கிச்சரிகிற ஆதாமிடம் மன்னிப்புக் கோரியபடியே
இரவல் வாகனத்தில் ஏறிப்பறக்கிற ஏவாள்
தன் காதல் தடயங்களேதும்
இல்லாததற்கு நன்றி சொல்கிறாள்
கடவுளுக்கு.

ஒவ்வொரு முத்தமும்
ஒரு சூன்யம்.



## கையளவு

கடந்த இரண்டு நாட்களாய் கட்டுக்குள் அடங்கவில்லை
தன்னெழுச்சி குறையவில்லை.
இப்படி ஒரு போதும் இருந்ததில்லை
இரண்டு மூன்றுமுறை
அனுபவித்த பின்னும் அமைதியில்லை
"என்ன தான் வேண்டும் உனக்கு..?"
என்றேன்

பெருமெளனத்தின் பின்
"எனக்கும் வேண்டும்
யோனியைப்போல் ஒரு இலக்கிய அந்தஸ்து"
என்றது
அது.

## மாயா

எதிர்காலத்தைக் காட்டும் கண்ணாடியை எடுத்துக் கொண்டு
நடந்தேன்
கொன்றை மரங்கள் அடர்ந்த தோட்டம் ஒன்று எதிர்ப்பட்டது.
தலை கவிழ்ந்த நெருக்கமான மரங்கள் உருவாக்கித் தந்த
இருளில் குனித்தபடி இருந்தது.
அதனுட்புகுவதற்கு வாசலைத் தேடியபடி அதன்
வெளிப்புறத்தைச் சுற்றலானேன்.
வாசல் என்றவொன்று இல்லை என்பதை அறிவதற்குள்
சில முறை சுற்றிமுடித்திருந்தேன்.

வேலிக்காத்தான் செடிகளை விலக்கினபடி உள்ளே புகலாம்
என்று முடிவெடுத்தேன்.
ஆங்காங்கே எட்டிப்பார்த்த சப்பாத்திக் கள்ளிமுட்கள் என்
உடலெங்கும் கிழித்தன.
என்றபோதும் வேகவேகமாய் உள்ளே நுழைந்தேன்.
தன் கண்களைக் கரிய நிறத் துணியால் கட்டிக்கொண்டிருந்த
ஒரு முதியவள் என்னை வரவேற்றனள்.
எதற்குமிருக்கட்டும் என்று அவளை ஒருதரம் வணங்கினேன்

அம்மூதாட்டியின் தலை சிக்குண்டிருந்தது.
சிக்கினாலானதொரு கூடு
கூடுதிரும்பியும் கிழத்தி உறங்கும் வரை தன்னால் உட்புக
இயலாதென்று வட்டமிட்டபடி காத்துக்கிடக்கும்
சல்லடைப்பறவை.
இன்று தான் உபவாசமிருக்கப் போவதாயும் இரவெல்லாம்
கண்விழித்து ஜெபிப்பதற்கேனும் ஒரு புதியதெய்வம்
அகப்படுமாவென்று அலைவதாயும் சலித்தபடி மொழியும்



கருப்புவெள்ளை மரங்கள்
என் குரலில் என்னோடு பேசத்தொடங்கிய நீர்ச்சுனை
எல்லாமுமிருந்தது

சரிபாதி வரைபடக் குறிப்பை வைத்துக்கொண்டு மீதிப்பாதி
வந்து சேர்வதற்குள் பித்துப்பிடித்த மாலுமி ஒருவனின்
இறுதிச்சடங்கு துவங்கியது.
புரட்சி மலர்ந்தே தீரும் என்ற பதாகையைக் கொண்டு
பட்டம் செய்து தருமாறு அனத்தித் திரியும்
குழந்தையினங்கள் குறுக்கும் நெடுக்கும் திரிந்தன.
நடுமையத்தில் ஒரு வீட்டளவுக்குப் பொழியத் தொடங்கியது
இல்லாமழை.போதாக்கலயங்களைத் தூர எறிந்தபடிக்குத்
தத்தமது சும்மாட்டை விசிறினபடி வேலைக்குக் கிளம்பினர்
பெண்பிறவிகள்.
முள்படுக்கையில் படுத்துக் கிடந்தவர் ஸ்கோர் என்ன எனக்
கேட்டதற்குக் காசுவாங்கிகள் கலவரத்தில் இரு நாடுகளைச்
சேர்ந்த மட்டையாளர்கள் சிலர் வெட்டிக்கொல்லப்பட்டதாய்க்
குறுஞ்செய்தி கிட்டியதாகச் சொல்லிச் சென்றான்
பொய்மட்டும் பேசத்தெரிந்தவன்.

சுயமோகி ஒருவனின் சடலத்தில் எஞ்சியபகுதிகளை
என்னசெய்யலாம் என்று கூட்டம் நடத்தியவர்கள் ஒருமுடிவும்
எட்டாமல் திரும்பிச்செல்லலாயினர்.
கவிழ்ந்த மலர் ஒன்று இங்குமங்குமாய் காற்றில்
அலையத்தொடங்கியது.
பிடிவாதி ஒருவன் தனதாடையைத் தானே
நெய்துமுடிப்பதற்குள் அவன் நிர்வாணத்தைக்
குதறிவிடலாமென்று தங்களுக்குள் கிசுகிசுத்துக் கொண்டன
குருதிப்புழுக்கள்
என் கையிலிருந்த கண்ணாடியைக் கொத்திக்கொண்டு
பறந்தது நிசி என்னும் பறவை

## பீக் ஹவர்

திணிக்கப்பட்ட உடல்களின்
மறைவிலிருந்து
கரமொன்றாய் எழுகிறேன்.
பெரிய மரப்பல்லியாய் மாறுகிறது.
இடுப்பில் படரவிடுகிறேன்.
கிள்ளுகிற ஆவலைப் புறந்தள்ளி
மெல்லத் தடவுகிறேன்.

முகத்துப் பூக்கள்
குருதி பீறிட்டுப் படர்கிறது.
இன்னும் கூட்டமேறுகிறது.
நெருக்கத்தில் கரத்தை விடுவித்து
முடிந்தமட்டிலும்
பின்புறத்தினை நெருக்குகிறேன்.

பெருமூச்சைக்
கழுத்தில் அவிழ்க்கிறேன்
இறங்கி ஏறுகிறவர்களுக்கு
வழிவிடுகையில் கால்களால்
இரும்புக்கம்பியோடு அழுத்துகிறேன்.

பிணவறையிலிருந்து
எழுந்து நடக்கிற
ப்ரேதமாய்க்
காறி உமிழ்ந்து இறங்கிச்செல்கிறாய்

என் நிறுத்தத்தில்
இறங்கிக்
கட்டணக்கழிப்பறைக்குள்
நுழைகிறேன்
நான் ஒரு வேசை



## எறியப்பட்ட ஒருகல்

எறியப்பட்ட ஒருகல்
எழுதிச்செல்கிறது
சலனமற்ற நதிப்பரப்பில்
ஒழுங்கான பல வட்டங்களை

## முத்தப்பாறை

மின் தடை நேரம்
தூறல்வீழும் தெப்பம் நினதுடல்
வியர்வை உளிகள்
பட்டுச்சிதறும்
முத்தப்பாறை
எனது



## வெப்பம்

நாம்
மெல்ல
உருகுகிற
மெழுகுவர்த்தி

அதன் வெப்பம் என்னுடல்

அதனுடல் உன் வெப்பம்

# காட்டுமனுஷி

காட்டுமனுஷி
இரவாகும் கூந்தல்
செந்தழல் மரவிழிகள்
துடிக்கும் இதழ்கள்
கனிச்சாற்றுக் குளம்
தாமரையென
மூழ்கியெழுவேன்



# காதல் கேடினும் கேடு

கனவெங்கும் நெளிகிற ஞாபகங்களின்
நீண்டு சுருளும் நாக்குகள்
வயலட் விஷங்களைப் படர்த்துகின்றன
தனிமையின் சுற்றுச்சுவர்களெங்கும்.

பாலை நிலவறையின்
வாயில்காக்கும்
கிழவனின் ப்ரேதத்தில் வடிந்திருக்கிற
வாயோரத்துக் கோழையை நோக்கி
ஊரும் அனாதியெறும்புகள்.

பெய்யாக் கானல் மழைச்சொட்டுகளாய்
எஞ்சுகிறது காலம்.
சென்றடையாக் கடித வாசகங்கள்.
சாம்பல் நிறப் பறவையிறகுகளாய்க்
கலைந்துகிடக்கின்றன

வெவ்வேறான
துந்துபிகளின் இசைக்கேடு
அநாமதேய வெளியெங்கும் ஒலிக்கிற
நிசப்தத்தின் நாராசம்.
பாவனைக் கிழத்தியின்
சும்மாடு நிறம் வெண்பழுப்பு.

பெயர்சொல்லி அழைத்தாலும்
நெளிய மறுக்கும் புழுக்களாய்
நொடிகள். உப்புக்காற்றின்
வெப்பத்தில் பற்றியெரிகின்றன
வழிவனங்கள்.

க்ஷணநேரம்
கண்ணயர்வதற்குள்
துரோகச்சாலையில்
ஓடிமறைகின்றன
அன்பின் புரவிகள்.

பாராமுகத்தின் செவிடுகளுக்கு
கேட்பதாயில்லை யாசகவார்த்தைகள்.
எந்த நதியும் நிஜமில்லை;பொய்யுமில்லை.
அவரவர் தலையோடு
நகர்ந்து கொள்கிறது நிழல்வானம்.

நாளங்களின்
ஒத்துழையாமையை விடக் கொடியது
புலன்மயக்கம்.
கழுத்தறுபடுகையில் கூர்மைக்கு
நன்றி சொல்வது உத்தமம்.

சில தேதிகள் பற்றிய
அறியாமை வாழ்தல்.
முதல் மணல்வீட்டின்
மேல் மிதித்த பாதம் வஞ்சகம்.
உடல்கவ்வும் பறவையின் கண்களாய் மனம்.

.எந்த அந்தியோடும் முடிந்துவிடுவதில்லை தினம்.
எல்லா ஞாயிற்றுக்கிழமைக்கு அடுத்துமா திங்கள் வரும்.
முதுகில் பாய்ச்சுவதற்குச்சில வார்த்தைகள் போதும்.
வதங்குதல் காதல் வரம்.

இருந்துகொண்டே இருக்கும் இவ்வுலகம்.
செய்வதற்கு மிச்சமிலாத சத்தியங்கள்
மார்புக்கூட்டின்
நடுப்புள்ளி பிளக்கக்கிடைக்கிற
வெற்றிடத்தின் மீது நிகழ்ந்தேறட்டும்.
சந்ததிக்குள் இருக்கப்போவதேயில்லை எவனும்.

எப்படிப் பெயர்த்தாலும் மிஞ்சிவிடுகிறது வாதை.



## ஜி.நாகராஜனின் வலதுகை

எதையும் வாங்கவில்லை
விற்கவுமில்லை
எனவே நான்
பேரம் பேசவில்லை.###

கொஞ்சியதெல்லாம்
போதும்
இந்த மழையின்
கூந்தல் பற்றி
முதுகில்
ஒரு சார்த்து சார்த்தவேண்டும்.

ஜி.நாகராஜனின்
வலதுகை
பீ.பி.ஶ்ரீனிவாஸின்
குரல்வளை
சில்க் ஸ்மிதாவின்
கண்கள்

எரிப்பது சுலபம்
மிஞ்சுவதெதுவும்
ஒருபிடி சாம்பல்

###(பிரமிளின் ஒரு கவிதை இடைவரி)

# இந்த வாழ்க்கை

இந்த
வாழ்க்கை
எப்படியோ போகட்டும்.
ஒரு கனவாவது
அகப்படுமா
சொல்லிக்கொள்ளும்படி.



# பைத்தியக்காரியின் முத்தங்கள்

*1*
சடக்கென்று
தோள்பற்றிக்
கன்னத்தில்
முத்தமிட்டுவிட்டுச்
சிரித்தவாறே
கடந்துபோகிறாள்
பைத்தியக்காரி.
கூடவே
வந்துகொண்டிருக்கிற
அந்த முத்தத்தை
எப்படி வீட்டுக்கு
அழைத்துப் போவதென்று
திகைக்கிறேன்.

**2**
தொட்டிக்குள்
இந்த
மீன்கள்
கிடந்து
அலைகின்றாற்போல்
அலைகிறாள்
பைத்தியக்காரி.
தன்
முத்தங்களும்
தானுமாய்

3.
ஏனோ
நெருங்கினான்.
எதற்கோ
நாணினான்.
எதுவுஞ்சொல்லாது
சுவரில் அலைகிற நிழலுக்கு
ஒரு முத்தம் வைத்தாள்.
அதனோடே சென்றாள்.
பைத்தியக்காரி.

4.
காற்றில் அலைந்து
கோருவார்
இல்லாக்
குப்பை மேட்டுக்
குழந்தையென
தரையில்
புரண்டு அழுகின்றன
பைத்தியக்காரியின்
பறக்கும் முத்தங்கள்

5
பாவனைக்குழந்தையின்
கன்னங்கொள்ளாமல்
மாறிமாறி
முத்தமிடுகிறாள்
பைத்தியக்காரி.
வெற்றுக் கன்னங்களை
ஏந்தியபடியே
கடந்துசெல்கிறது
பள்ளிப்பேருந்து



# புன்னகை

கோன் ஐஸ்
உருகிவிடுவதற்குள்
வீடு சேர்வதற்காக
ஒற்றைக்கையால்
ஹேண்ட்பாரை
வளைத்தபடி
சைக்கிளில்
விரைகிறவன்
எதிரே வரும்
எல்லோருக்காகவும்
வைத்திருக்கிறான்
சங்கோஜமாய்
ஒரு
புன்னகையையும்.

## உபரித்தகவல்

சென்னையாவது
தமிழ்நாடாவது
இந்தியாவாவது
உலகமாவது
வாங்கிக்கொள்ளச்
சொல்லிக்
கெஞ்சுகிறான்
மேப் விற்பவன்.
உபரித்தகவலாகப்
பசியாயிருக்கிறதையும்
சொல்லிப் பார்க்கிறான்.



## "F7 பூமார்க்கெட் காவல் நிலையம் ...

காவல் நிலையத்தின் வாசலில் வரிசையாக பூந்தொட்டிகள் இருக்கின்றன.
சற்றுத் தள்ளினாற்போல்
வழக்குகளிற்குத் தலையைக் கொடுத்த
வாகனசடலங்கள் குவித்துவைக்கப்பட்டிருக்கின்றன.
நுழைந்தவுடன் நீள மேசைக்குப் பின்னால்
எழுத்தர் ஒருவர் மைப்பேனாவை
உதறியபடியே எழுதிக்கொண்டிருக்கிறார்.
அவருக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள
சதுக்க பூதம் கதறிக்கொண்டிருக்கிறது
"கண்ட் ரோல் ரூம் காலிங் ஏ3 எஸ்.ஐ." எனத் திரும்பத்திரும்ப.
உள்ளறையில் ஐயா யாருடனோ பேசிக்கொண்டிருக்கிறார்.
அப்போது தான் நுழைகிற பயிற்சிகால உதவி ஆய்வாளினியைப் பார்த்து
ஏளனம் ததும்பப் புன்னகைக்கிறார் 8432.பரமன் ஏட்டையா.
எதையோ சொல்லச்சொல்லி உள்ளே 3245 பழனிச்சாமியும் 6766 மூர்த்தியும்
லத்திகளால் விளாறிக்கொண்டிருக்கின்றனர் ஒருவனை.
சற்றுத் தள்ளினாற்போல் ஜட்டியுடன் உட்கார்ந்திருக்கிறான் ஒருவன்
அவன் தலைக்கு மேலே இருக்கிற பலகையில்
அந்தப் பிராந்தியத்தில் கடந்த வருடங்களில் நடைபெற்ற
குற்றச்செயல்களின் பட்டியல் இருக்கிறது.
ஆய்வாளினியின் அறைவாசலில் இருக்கிற பென்ச்சிற்குப் பக்கத்தில்
அமர்ந்து இருக்கிறவள் வாயில்
நேற்றுக்குதப்பிய வெற்றிலைக்கறை தெரிகிறது.
உள்ளே ஆவணங்கள் காப்பறைக்குள்ளிருந்து
தலையசைத்தபடியே வெளியே வரும்

லக்ஷ்மணன் ஏட்டையாவைக் கெஞ்சியபடியே
பின் தொடர்கிறார் ஒருவர்.
நடுத்தர வயதுக்காரர் ரத்தம் சொட்டச்சொட்ட
உள்ளே நுழைந்துகொண்டிருக்கிறார்.
கைது செய்யப்படுபவர்களின் உரிமைகள் என்ற தகவல்பலகை
பார்வையாளர்களின் முதுகுப்புறச் சுவரில்
பொருத்தப்பட்டிருக்கிறது.
பின் குறிப்புகள்:-

17.06.2008
விசாரணைக் கைதி ஒருவன் பெயர் ராமசுப்பு.
திருட்டுக் குற்றத்தில் தொடர்பிருக்கும் என்ற ஐயத்தில் கைது செய்யப்பட்டவன்
சந்தேகத்திற்கிடமான முறையில்
ஸ்டேஷன் லாக்கப்பில் தூக்கிலிட்டு மரணம் அடைந்தான்.

29.03.2009

ஒரு சிவில் பிரச்சினையில் லஞ்சம் வாங்குகையில்
இன்ஸ்பெக்டர் திருதிராஷ்ட்ரன்
லஞ்ச ஒழிப்பு காவலர்களால் கையும் களவுமாக பிடிபட்டுப்
பணியிடை நீக்கம் செய்யப்பட்டார்.வழக்கு நடந்துவருகிறது.

31.05.2010

நள்ளிரவு ஸ்டேஷன் ட்யூட்டியில் இருந்த
6318 குணசேகரன் வயது 45. முதல் நிலைக் காவலர்
தன் துப்பாக்கிவிசையைத் தானே அழுத்தி தற்கொலை
செய்துகொண்டார்.



## இசையிடை மௌனங்கள்

வெறித்தபார்வை நிலைகுத்தி
நாயக்கர் மகாலுக்கு பின்னம்பக்க சாலையில்
மூத்திரம் கழிக்கிற இட அருகாமையில்
அரூபர்களிடத்தில் மொழியிலும் மௌனத்திலும்
உரக்கவும் மெல்லிய குரலிலும்
விசும்பலுடனும் பிளிறலுடனும்
பேசிக்கொண்டு பேசாதிருக்கிறவன்
இல்லாமலும் போயிருப்பவன்
எந்த நாணயத்தை தட்டிலிட்டாலும்
கைதட்டி அழைத்து
எட்டணாவைத் தவிர மற்றவற்றை
திருப்பித் தந்துவிடுகிறான்
பெரியார் பேருந்து நிலையத்தின்
வடக்குவாசல் வெளியேறும் வழியில்
இரண்டுபுறங்களிலும் செருப்புத் தைக்கிறவர்களுக்கு
மத்தியில்
அமர்ந்திருக்கிற நாணயஸ்தன்.

அரசரடியில் ஆளற்ற
ஏ.டி.எம். மையவாசற்படிகளை
ஆக்கிரமித்துக்கொண்டு
அதன் சரிபாதியில்
குப்பைகளை சரக்குகளை
கடைவிரித்து வைத்திருப்பான்.
சாயங்காலத்தின் பிற்பகுதிக்குமேல்
நள்ளிரவு வரைக்கும்
தினதின இரவுகளில்.
பெருமுதலாளி.

காரைபடிந்த பற்களிலும்
கிழிந்து தொங்குகிற ரவிக்கையின்
பொத்தல்களைக் கிஞ்சித்தும்
அக்கறையின்றி

சிக்கடைந்த கூந்தலோடு
இங்குமங்கும் அலைகிறாள்
இறந்தகாலப் பேரழகி.
பழுங்காநத்தத்தில் கைவிடப்பெற்ற
ஜெகதா திரையரங்கத்தின் பூட்டிய கதவுகளுக்கு முன்புறமாக,
வாகன நெரிசலில் சிக்கி
மாண்டுபோன பிருத்விராசனொருவனின்
குதிரைக்குளம்பொலிகள்
தனக்கு மாத்திரமாய்க் கேட்கிற நம்பிக்கையில்
வருடத்திற்கொரு முறை
அழகர் ஆற்றிலிறங்குகிற வைபவத்திற்காக
ஒழித்துத் தரப்படும் கல்மண்டபம்
மற்ற தினங்களில்
தேநீர்விடுதியாய்க் காட்சியளிக்கும்
கோசாகுளம்புதூர் நேர்சாலையில்
அடிக்கடி விளக்குமாற்றோடு வந்து
கடைவாசலை பெருக்கித் தூற்றி
சுத்தஞ்செய்து தெருத்திரிகிற
"இந்தா....மல்லிகா அக்கா!"
என அழைத்துக் கொடுத்தால்
மட்டும் தேநீர் அருந்துவாள்.
பொறை தின்பாள்.
திருநகரின் இளவட்டங்கள்
கையேந்துகிறவனிடம்
ஒரு தாளைக் காட்டி
இதில் கையெழுத்திடு
எனச்சொன்னால்
உடனே ஓலமிட்டுவிட்டு
தெருவிலிறங்கி ஓடுகிறவனின்
இப்போதைய பெயர் கண்டுக்காலன்.
இதற்கு முந்தைய அத்தியாயத்தில்
அவன் தனது
அத்தனை சொத்துக்களையும் இழந்தது
ரத்தினம் என்கிற தனதான
கையெழுத்திட்ட அறியாமையால்தான்.

ஓச்சமென்ற பெயரேந்தி
தன்னைத்தான்
நிரப்பிக்கொள்கின்றன
இசையிடை மௌனங்கள்.

# ஆதிவனமழை

## நீர்மத்தின் பேரோசை

ஒற்றையுயிரிகள்
உயிர்க்கனம் தேக்கிட
எறும்புகளின் விழிகளில்
பெருவெள்ளமாய் சிறுதுளிகள் சிதறுகின்றன
மண்புழுக்களின் பாதை
முன்னும் பின்னும்
சிதைந்து தொங்குகிறது.
வளை கிழிந்த நண்டுகளின்
சாபவொலிகள்
நீர்மத்தின் பேரோசையில் பிசிறுகின்றன
உறக்கப் பாம்புகள் சகதியில் நெளிகையில்
கீழ்த்தளப் பறவையினங்களின் சிறகுகள்
கனத்துப் படபடத்து அடிக்கையில்
அதற்குள் இன்னொன்றாய்ப்
புதுமழை மண்ணிற்படச்
சேர்மானங்களில் பிறக்கிற
நிறங்களின் தாற்காலிகத்தை
வியந்தபடியே
கலைடாஸ்கோப்பை
இன்னொருமுறை
உருட்டத் தலைப்படுகிறான்
கிழப்பேரரசன்.

## கூரைநதிமழை

தேரைமொழி சமிக்ஞைகளின்
அலைவுப்பாதையில்
துளிகள் சிதறக் கூந்தலவிழ்க்கிறாள்
நறுமண்கிழத்தி
சிடுக்குவாரியின் இருள்வழிகளில்

புகுந்து புகுந்து மீள்கின்றன
முன்பழங்காமத்தின் குமிழிகள்
சொல்வதற்கு முன்பே
மறந்துவிட்ட ரகசியமாய்
எதிரொலிகளின் கழிவெச்சங்களைக்
கணக்கெடுத்து வியந்துகொள்கின்றன
சறு பேனாகிப் பேன் என்னவாகுமென்று
நீட்டிய கால்களைக் கட்டிக்கொண்டு
கேட்கிற பெயரர் பெயர்த்திகளிடத்தில்
இன்றைக்கான கதையின்
முதல் வாசலைத்திறந்து
சொல்லத்துவங்குமுன்
லாவகமாய்க் கூந்தலை
முடிந்தும்கொள்கிறாள்
கூரைநதி
சுவர்களின் இடுக்குகளில்
வழிந்து தரையிலிறங்கி
சமீபிப்பதையுணர்ந்து
வெடுக்கெனக் கால்களை
மடக்கிக் கொள்கிறவளருகில்
அழைத்தால் வருவதற்கென்று
கைகட்டி நிற்கின்றது
மழையின் புனைவு.



## பால்நதி

மரங்களின் உச்சந்தலையில்
இறங்கிக் கரிபூசித்
திரும்புகிற பேரிடிக்கும்பல்
பந்தயகாலம்
முடிகிறவரைக்குமாய்
இணையுடன்
கூடுதல் கூடாதெனும்
உபவிதிக்கு இணங்கப்
பாய்பிரித்து

வாயிற் திண்ணையில்
உறங்குகிறான் சேந்தகுமாரன்.
உள்ளறையெங்கும்
நிரம்பிகனக்கிற

காமத்தின் விழுதுகள்
அழுந்தி விம்முகையில்
முலைவெடிக்கப்
பீறிடுகிறது பால்நதி.
மறுபொழுதில் முன்னிரவின்
போர்வையுதறச்
சிதறிக்கிளம்புகிற

மழைக் குளவிகள்
கொட்டித் தீர்த்தபின்னே தான்
திரும்புவோம் என்று
ப்ரேதமொழியில்
செய்துகொடுத்த சத்தியத்தின்
நிசப்தம் ஓயாதொலிக்கிற
இடுக்கில் தன்
நினைவுகளைத்
துவைக்கத் தொடங்குகிறாள்.
நிலானி.

## ஊதாரி

எதற்கும்
முந்தைய காலத்தின்
இருள்
குரல்களால் நிரம்பிக்கிடந்தது
தாமரைகள் படர்ந்து வரளும்
ஒழுங்கிலாச் செவ்வகக்குளத்தின்
துருத்துகிற தரையில்
எரிந்து சாம்பலான
பெதும்பை நட்சத்திரத்தின்
விளிம்புகளைச் செல்லரித்துக்
கொழுத்த வயிற்றை
சுமக்கவியலாது
தள்ளாடுகிற கரையான்கள்
வரிசை தப்புகின்றன.
முதலாவது துளைக்கும்
அடுத்ததற்குமிடையில்
கழிந்த காலத்தினைக்
கிஞ்சித்தும் கருதாது
ஊதாரி ராகமொன்றை
எழுப்புகிற முனைப்பில்
இருக்கிறான் தழையாடைச்சிறுவன்.
கசக்கியெறிந்த கனிகளிலிருந்து
காற்றின் உடலுக்குள்
புகுந்துகொள்கிறது வாசனாதி.
கூனமரமொன்று
சுயவிழுதுகளில்
சுருக்கிட்டுத் தற்கொலைக்கு
முயல்வதைத் தடுப்பதற்கான
அவகாசத்தின் உட்பரப்பில்
அழுதுபுலம்பியபடியே
தரைமோதுகிறது
மழை.



## கெண்டை

சகியைக் கொன்ற ஆதி
பிளந்த
ஒருபாதிப்பூசணி ஓட்டைக்
கையிலேந்தித் திரிகிறான்
அனாதிவெளி வீதிகளெங்கும்
சுருண்டுகிடக்கிற
பழுதுகளைத் தேடித்தேடி
அவசரவிழிகளைத்
திறந்துவிட்டபடி
கடக்கிறது வாடை.
மணலின் கோரக்கரங்கள்
முன்னிழுக்கையில்
முளைக்கிற நாவுகளை
வெளித்தள்ளுகையில்
கடிவாய் துருத்துகிறது.
ஆழ்நிலத்தின்
இடைவெம்மை மேற்கிளம்ப
உடலெங்கும்
பூக்கத்தொடங்குகின்றன
விஷத்தின் மலர்கள்.
பிரிவுப்பொழுது
அபலை
முலை கட்டிய
பாலைப்பிதுக்கி
வெளியேற்றுகிறாற்போல்
முதல்கொலைச்செயலுக்கான
நியாயத்தைக் கற்பித்துக்கொண்டபடி
முன்னகர்கின்றன சர்ப்பங்கள்.

ஆதியவன்
ஓடு கொள்ளாத கனிகளைப்
பிசைந்து உருட்டிக்கவளமெடுத்து
வாய்க்குள் நுழைக்கையில்
வலது கெண்டைக்காலில்
கொத்திச் சரசரத்து
மீள்கிறது ஒருசர்ப்பம்
மரணங்களின்
மீது பொழிந்து
பழகுகின்றது மழை.



# திராவகம்

முந்தைய
இரவெச்சமாய்க்
கால்கள் பாவி
நகரும் ஐராவதத்தின்
பாத இடுக்குகளில்
புகுந்து வெளியேறிக்
கண்கட்டில் ஈடுபட்டிருக்கும்
பூச்சி இனத்தின் பேரழகன்
காலகாலங்களுக்கான
கையெழுத்தைக்
கூழாங்கற்களின்
உடலைக் குறுகுறுத்தபடி

முதுகிலிட்டு நகர்ந்து செல்கிறவனுக்கு
பெயர் வைப்பதற்கு முன் தினம்
குதித்த இடத்திலேயே
இன்னமும் இருக்கின்றோமென
நம்பிக்கொண்டிருக்கிற பழுத்த இலைகள்
பயணித்தலைகின்றன
எறும்புகளின் சங்கிலியை வெட்டி நிற்கிற
மந்தியின் முதுகில் ஊர்ந்துசெல்கின்ற எறும்புகள்

மெல்லப் பிளக்கிற இடைநிலத்தின்
இரண்டுபுறங்களிலும்
நின்றுகொண்டு பற்களைக் காட்டியபடி
வம்புக்கிழுக்கின்றன

உயரப்படர்ந்த
விதான மரங்களினிடையில்
தப்பிப்பிழைத்த
ஒளிக்கீற்றினைத் துரத்தியபடி
சப்தித்துப் பொழிகிற மழை.
தன் எச்சில் த்ராவகமென
மெல்ல நனைகிறது
ஆதி
வெகுதொலைவு
நீங்கியிருக்கிற வனம்.

## மற்றாங்கே

புரவிக்குளம்பொலி
கேட்கையில்மட்டும்
வீறிடுகிற குழந்தைகள்
மற்றாங்கே திவ்வியமாய்
உறங்கிக்கிடக்கும்
முதுகுத்தொட்டில்களில்.
காலில் இடறுகிற
எலும்புகளை
விளையாட்டுச்சாமான்களாய்க்
கொள்ளும் சிறார்களை
அதட்டுகிற சாக்கில்
வேறுசில வேலைகளுக்குப்
பணிக்கிற மூப்பனைப்
பொருட்படுத்தாது கற்களை
ஆளற்ற அந்தரத்தில்
எறிவர் சிறார்வகையினர்
பட்டைகளில் வழிகிற
தேனைத் தரைதொடுமுன்
கையிலள்ளி
மூடிய உதடுகளில்
பூசி மகிழும் பெண்டுகள்
கையில் கனக்கிற
தம்பியாபிள்ளையை
கேடயமாய்த் தாங்கி
இன்னொரு கரத்தினைமட்டும்
சிண்டலுக்கு நீட்டும்.
மரங்களையொத்த நிறத்துடன்
ஒடிக்கிளம்புகிற
நரியின் புட்டத்தைக்
குறிபார்த்து கல்வீசுகிற
சின்னவனின் தலைகோதி
மகிழ்வாள் கிழத்தி.
கூடாரங்களுக்கு வெளியில்
புகையும் கலத்தில்
மண்டைக்கறி கொதிக்கிறவரை
அதிலும் வெளியிலுமாய்
கண்களை மாற்றிக்கொண்டே
சிரிக்கிற யுவதியின்
கூந்தல் அவிழ்கிற அக்கணம்
வனமெங்கிலும்
வந்து குதித்தது ஒருமழை.

# கொட்டடி

நெளிந்தோடுகிற நதியின்
குறுகலொட்டிய கரைமேட்டில்
சின்னஞ்சிறு குடிசை
பார்வையின்
நாற்சதுரமெங்கும்
யாருமிலாத் தனிமையின் நீட்சி
வனவகைக்கு விஞ்சியவை
வீடுதிரும்பட்டுமென
மேய்ச்சலுக்கு அனுப்பப்பட்ட
செம்மறிகள்
ஆங்காங்கே அலைந்துதிரிகின்றன
அடுத்தடுத்தாய்
கொட்டடிப்பசுவும்
தூளிப்பயலும்
தூங்குகிறாற்போல்
நடிக்கிற கள்வனும்
குரல்விளிக்கையில்
கணவனை அதட்டி
தூளியை ஆட்டி
பசுமடி பீய்ச்சி
மறந்தவள் நெருங்குகிற வேளை
மலர்வனை அறுந்து சரிய
இடையுரி நெகிழ்ந்து உரிய
விழிகளில் வெட்கம் உறைய
தவித்தபடி
தவிர்த்தலைத் தவிர்க்கிறாள்
விளிம்புகளெங்கும்
பொங்கித் ததும்புகிற காமம்
நதிநுரை ரெண்டும்
நிறமற்றுக் கலந்து பிரிகையில்
நதியில்
கரையில்
வனத்தில்
பொழிகிறாற்போலவே
பிள்ளையைத் தூக்கிவர ஓடுகிறவளின்
வெட்கத்திலும்
பொழிந்து தீர்க்கிறது மழை.



# அரவாணி

அரவாணிகளின்
பெருங்கோபமொழி
இரவுகளெங்கும்
சாபமாய்ப் பிரிந்தலைந்தன.
பகல்களில் தனிமையில்
நடைதொடரும்
ரெண்டாவது நிழலாய்ப் பயங்கூட்டின.

வரப்புகளில் வேலிகளில்
ஒட்டமாய் ஓடி
ஊர்சேர்கிறவரையினில்
சூனியம் பூசின சாபங்கள்
ஆடவர்களை விரட்டலாயின.
அருச்சுனன் மகன்
வருவதாய்ச்
சொல்லிச் சென்ற திசை
கிழக்குத் தவிர
மற்றவற்றில்
வந்து அணுகுகிறவர்களின்
கட்டைவிரல்களை
பறித்துக்கொண்டபின்
விடுவித்துவிடுவது
தினப்படி விளையாட்டு.
மறுத்தோடுகிறவர்களை
துரத்தியடித்து
நிலத்தில் வீழ்த்திக்
குழிதொண்டை குதறி
இரண்டு விரல்களில்
சொட்டுகிற குருதியை
நிலத்தில் தெளித்து
பந்தி நடனமாடத் தொடங்குகையில்
குருதிச்சுவட்டின் தடமழித்து
ஆசிர்வதித்துப்
பெய்யத் தொடங்குகிறது
அரவாணிகளுக்கான
பிரத்யேகமழை

## தாபம்

பெருங்கூட்டங்களினிடையிலான
முதற்போர் துவங்கியது.
சிறுபிள்ளை மனத்தாபம்
புகைகண்ட பெருநெருப்பு
வயல்களிடை பற்றியெரிந்தது.
சமாதானத்திற்கான சொற்கள்
வாயிலும் மார்பிலும்
அடித்துக்கொண்டமுகையில்
கற்களுக்கும் சக்கரங்களுக்குமான
பயன்பாட்டில்
தொடர்ந்தேறியது வன்மம்
நிலமொன்றை வகுத்து
வேலியிட்டுப்பிரிக்கிற
நடைமுறை வந்தது.
தனிக்கொஞ்சமாய்ச் சமைத்துண்ணும்
நிதானம்
தனியறையுள் உறைகின்ற
நிதானம்
தனிக்குதிரில் சேமிக்கின்ற
நிதானம்
தனித்தெய்வ வழிபாட்டு
நிதானம்
தனிப்பயணப் புரவிக்கூட்ட
நிதானம்
பிரேதத்தை தனித்தாழியிடும்
நிதானம்
என்றாங்கே
நிதானங்களெல்லாமும்
நடைமுறைக்கு
வந்திருந்தன.
நிதானங்களின் மீதான பெருமழை
துவங்கிற்று.



மழை கவர்ந்த மிச்சங்கள்
நிலத்தீற்றலாய்க் கலைந்துகிடந்தன.
தோள்தழுவிய பெண்மக்கள்
இழப்புக்களின் பட்டியலைச்
ஒப்பிட்டுக்கூடியமுகையில்
முடிவுற்றிருந்தது
பிடிவாதப்போர்.

## சங்கில் புகுந்த மழை

கடல் காண அஞ்சிக்
கரைதொட்டே ஓடத்துவங்கியவன்
வேறொருவனாய் வீடு மீண்டான்.
மகாகப்பல்களின் துவக்கம்
யாரோஒருவன் உள்வாங்கிய
தக்கையின் ஊசலாட்டம்
மீன்களைக் கேட்டும் நச்சரித்திருக்கலாம்
பயணங்களுக்கான வித்திட்டு.
நீர்மேல் நகர்ந்தவன் வணிகன்.
பகுதியிடப்பெற்ற
வரைபடங்களில்
சமிக்ஞைகளில்
உறைந்துகிடந்தது அவனது காலம்.
கையசைத்து
வழியனுப்புகையிலெல்லாமும்
பயணிக்கிறவன் மரணமடைந்தான்.
இமைகளைக் காவுகொடுத்து
காத்திருத்தலின் கணங்களைத்
துவங்கிக்கொண்டனர் பெண்டுகள்.
திரும்பிவருவதற்கான
பாதையின்
மீது விசிறி எறிந்தனர்
ஏக்கங்களை.
அவை வெண்ணிறத்திலான
சங்குகளாய்ப் பூத்துக்கிடந்தன
கடலெது கரையுமெதுவென்ற
அக்கறையின்றி
விலைபெற்று
முயங்கவரும் தோழியொருத்தியின்
சரிந்த முந்தானையாய்
அலட்சியமாய் விரிந்திருந்தது
கரைவெளி.
யாருமற்ற நிசிகளில்
வந்தபடியும்
உப்புநீர்ப்பரப்பின் மேல்



ஆங்கார நடனமாடி
கொட்டிக்கொட்டித் தீர்ந்தபடியுமாய்
இருந்தது
மனநிலை பிறழ்ந்த மழை.

திரவியங்களைச் சுமந்தபடிக்கு
கரைமேடேறி நின்ற கப்பலைச்
சூழ்ந்துகொண்டனர்
பெண்டுகளும் பிள்ளைகளும்.
கால்களை இடறிய
வெண்சங்குகளினுள்ளே
கனத்துக் கூழ்மமாகி இறுகித்திரளத்
துவங்கியிருந்தது
கண்ணீர்காலத்துத்
தனிமைப்பெருமழை.

## போர்க்காலப் பெண்மழை

இடைநிலைமிருகங்கள்
ஆக்ரோஷத் தரவிறக்கிய
மனிதப் பதாதிகள்
இரும்பு ஆயுதங்கள்.
சக்கரங்களை
நம்பியுருள்கிற ஆணவ ரதங்கள்
முன்னரெப்போழ்தோ
கற்றுக்குவித்த போர்முறைகள்
அத்தனையும் போதுமானதாயிருந்தன
மறுநாள் போருக்கான
ஆயத்தங்கள்.
நெற்றியில்
அழுத்தமாய்த் தரப்பட்ட
முத்தங்களுக்குள்
பொதிந்திருக்கும் அபூர்வங்களை
காதல் தலைவிகள்
உணரவே உணர
போருக்கு முந்தயதின
தினப்பொழுதில்
கண் துளிர்க்கக் கட்டில்களில்
முயங்க முற்பட்டுப் பாதியில்
எழுகிறான்-
எழுகிறான்-
எழுகிறார்கள்.
மீண்டுவருவேனெனத்
தலையொற்றி சத்தியம் செய்து
கம்பீரமாய் வெளியேறுகிற
தலைவனின் கிடக்கையிலிருந்து



சொட்டிய வதங்கலின்
துளிகளைப் பத்திரம் செய்துகொள்கிறாள்
மனைத்துணைவி.
அந்நேரம் அப்பொழுதில்
கண்களை மறைக்கும் காரணன்
முன்னிற்கும்
நூல்தரித்த பார்ப்பனன்
சோழிகளை
உருட்டித் திசைகளைக் கழிக்கிறான்
"சூலம் வடக்கைத் தவிர்
எமதிசை தெற்கு வேண்டா
உனக்கு மேற்கிலில்லை சாதகம்
என்பதால் கிளம்புக கிழக்கு"
என்று கோள் சொன்னவன் கிளம்ப
அப்பன் மூத்தோன் அம்பாரி நிறைத்து
ஆங்காரமாய்க் கிளம்பி நடக்கையில்
தொடக்கத்துக்கு வந்தது போர்.
போர்க்களம்
சென்றவர் மீள்கிற வரைக்கும்
அரசாணி முதலான
அனைத்துப்பெண்டிரும்
போர் பொறுத்தழுதிடக்
கண்சகிக்காது
கலங்கலாய்ப் பொழிந்தது
பெண்டிர் சேமித்த
வதங்கலின் துளிகளாய்
போர்க்காலத்தின்
காத்திருத்தல் மழை.

## கூட்டொலி

ஊரையே காலி செய்திருந்தது மழை.
வேலிக்காத்தான் மரங்கள்
சிடுக்குற
செம்மண்சாலைகள்
குழம்பாயுருகிட
வீடுகளின் கூரை உயரங்களை
ஆழப்புதைத்துக்
கால்பந்தாடிக்கொண்டிருந்தது
நீர்தொகுப்பு.
மொத்தமாய்
விஞ்சியிருந்தவை
குரல்வளைகளின்
கூட்டொலி அழுகைகளும்
எடைகூடிய பொருட்களும்
அடித்துச்செல்லாத சிலவும் மட்டுமே.
பசிக்கழுகிற பிள்ளைகள்
கேவலின் விளிம்பில்
செயலற்று உறங்கிக்கிடக்க
இன்னமும் காயாத
மார்பாடை விலக்கி
முலை திணிக்கிற தாய்கள்.
மேட்டாங்கரையின் கல்மண்டபம்
பிரிவினைகளில்
கவனியாது விட்ட இருளுக்குள்
கலந்து கிடக்கின்றன
இழந்தபின் எஞ்சியவை.
மூன்று பெருங்கல் வைத்து
குண்டானில் கொதிக்கிற
சோற்றுக்குத் துணைக்கூட்டாய்
"எது தருவதென?" கேட்கிறவளிடம்
நொடிதப்பிப் பதிலுகிறார்
மூத்தவரொருவர்.
"நம்ம தலயெளுத்தத் தொட்டுத் தின்னட்டும்"
என்று.
வந்து போயிருந்தது மழை.



## ஒரே குமாரன்

தொன்மையான தேவாலயம் அது.
திருமணம் ஒன்று நடந்தேறுகிறது.
மணமகள் வசம் கேள்வியாய்க் கேட்கிறார் பாதிரி.
அவள் தனக்குச் சம்மதமே என்கிறாள்.
மோதிரங்கள்
இரண்டு பேரைத்
தாம்பத்யத்தினுள்
விரல்பிடித்து அழைத்துச்செல்கின்றன.
அனைவரும்
அன்பைப் பூசின
வாழ்த்துகளைப்
பரிமாறிக்கொள்கின்றனர்.
இரண்டு பேர்
கணவன்-மனைவியாவதற்குள்
இரண்டு குடும்பங்கள்
அத்யந்தமாகின்றன.
இரண்டு கூட்டங்கள்
பரிச்சயத்தில் நெருங்குகின்றன.
இரண்டு ஊர்கள்
நேர்பாதையொன்றில் பிணைத்துவைக்கப்படுகின்றன.
ஒரே குமாரன்
இவர்களுக்காகவும் மரித்து
இவர்களுக்காகவும்
மீண்டும் உயிர்த்தெழுந்ததான
பொது நம்பிக்கையின் மீது
கட்டப்பட்ட
ஒப்பந்தத்தின் வாசகங்களுக்குள்
புதிய வாழ்க்கையொன்றை
வாழ்வதற்காகப் புறப்படுகின்றனர்
வெள்ளை ஆடை தேவதையும்
கரிய சூட் அணிந்த சாதகனும்.
பின் தொடர்ந்த
குடும்பமும் கூட்டமும்

அமரக்களவிருந்தொன்றில்
சங்கமிப்பதற்காகக் கலைந்து சென்றனர்.
தேவாலயத்தின்
மையமண்டபத்தில்
சுவர்ப்பிரதானத்தில்
சிலுவையிலறையப்பட்ட
குமாரன் தனிமையிலிருக்கிறார்.
மாலைக்குப்பிந்தைய இருளில்
சுமக்கவொண்ணாத
பெரிய கிட்டாரொன்றைத்
தூக்கித் தள்ளாடியபடியே வருகிறான்
ஒருவன்.
அவன்
காலையில் மணமகளாய் நின்ற
வெள்ளையுடை தேவதை
கைவிட்டுக் களைந்தெறிந்த காதலன்.
அவன் பெயர் ரொசாரியோ.
அவன் ஒரு ஏழை.
அவன் இசைக்கத் துவங்குகிறான்
உறுதியான தந்திகள் எழுப்பக்கூடிய இசையை.
அந்த இசை அபூர்வமானதாயிருக்கிறது.
அந்த இசையினுள் குருதி கலந்திருக்கிறது.
அந்த இசையினுள் மரணத்தின்
பச்சவாட்டுச்சித்திரம் ஒன்று தொங்கிக்கொண்டிருக்கிறது.
அந்த இசையினுள்ளிருந்து
கொப்பளிக்கிற கண்ணீர்த்துளிகள் நாலாபுறமும் தெறிக்கின்றன.
அந்த வளாகத்தின்
மணற்கரை முழுவதிலும்
அவன் தன் இசையால் நிரப்புகிறான்.
அவனது கண்ணீர்த்துளிகளின் அழைப்புகளை ஏற்று
கொட்டித்தழுவுகிறது மழை.



# கடவுளின் மின்னஞ்சல்

ஒரு முப்பத்திரண்டாம் தேதி,
கடவுளின்
மின்னஞ்சல் முகவரியின்
கடவுச்சொல் களவாடப்பட்டது.
அவனது முகப்புத்தகம்
ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டது.
கடவுளின் கையறு நிலை
தொடங்கிற்று.
கணிப்பொறி இயல் விற்பன்னன்.
அவன் ஒடிசலான தேகத்தோடும்
நெற்றிசுருக்கிய பார்வையோடும்
செயல் திட்டங்களையெழுதி அலுத்தவனாகவும்
செயற்கரிய எதையாவது முயல்கிறவனாகவும்
இருந்தான்.
ஒரு சனிக்கிழமை இரவு
முழுவதும்
அவனொரு கணினி மொழியொன்றை
எழுதலானான்.
வெற்றிகரமாய் அதனைச் செயல்படுத்தியவன்
முதலில் கைவைத்தது
கடவுளின் மின்னஞ்சல் முகவரியில்.
பிறகு மெல்ல முகப்புத்தகத்திலும்.
உலகின்
அத்தனை அழகிகளும்
கடவுளுக்கு
தோழிகளாயிருந்தனர்.
ஒரே ஒருத்தியைத் தவிர.
அந்தத் தகவலுக்காகவே
காத்திருந்தவன்
அந்த ஒருத்தி யாரெனக்
கவனமாய்க் குறித்துக்கொண்டான்.
செய்வதறியாது திகைத்த கடவுள்
சைத்தானைத் தேடி ஓடினான்.
இன்முகத்தோடு வரவேற்ற சைத்தானிடம்
தனக்கு உதவுமாறு கேட்டுக்கொண்டான்.
கைவிரித்த சைத்தான்

தன்னால் ஒருபோதும் கடவுளுக்கு
உதவமுடியாதென்று சொல்லி
வெளியேறச்சொன்னது.
அழுதுகொண்டிருந்த கடவுள்
ஆவேசத்துடன்
"யாது காரணம்?" என்று வினவ,
அமைதியான குரலில் சைத்தான் சொன்னது.
"உன் முகப்புத்தக கணக்கினை
ஆக்கிரமித்தவன் என் மகன்"
என்று.
தோல்வியோடு
வெளியேறிய கடவுள்
எட்டிப்பார்க்கிற வேளையில்
உயரமான கட்டிடமொன்றின்
மொட்டை மாடியில்
அந்த ஒடிசல் தேகத்தானும்
அவனது காதலியும்
பேசிக்கொண்டிருக்க,
முழுக்கக் கரிய
நிறக்குடைகளால்
தைக்கப்பட்டிருந்த வானம்
அவர்களிருவர்
தலைகளின் மீது மட்டும்
மழை
பொழிவித்துக்
கொண்டிருந்தது.